
கிழக்கில் அச்சுக் கலையின் முன்னோடி...
வணசிங்கா பிரிண்டர்ஸ்

496A, திருமலை வீதி, மட்டக்களப்பு.
065 222 7170, 065 36 50 361
wanasingheprinters@gmail.com



# தமிழ் ஓசை

மட்டக்களப்பு

"தரணியெங்கும் தமிழை உரக்கச் சொல்வோம் உரைக்கச் செய்வோம்"



மட்டக்களப்பில்...
பத்திரிகை விற்பனைத்துறையில் முன்னோடி
ராதா ஸ்ரோர்ஸ்

திருமலைவீதி, மட்டக்களப்பு.
(வயோதிபர் இல்லத்துக்கு முன்னால்)


BATTICALOA


கிழக்கிலங்கையின் முதல் தமிழ் நாவல் அரங்கநாயகி 03

பாடசாலைகளுக்கு அப்பிள் சமூக மேம்பாட்டு அமைப்பின் உதவிக்கரம் 02

10 பாரிசவாதமும் இயன் மருத்துவத்தின் மகத்துவம்

03 படுவானும் நானும்


ஒலி : 01 ஓசை : 06 மாதாந்த வெளியீடு (மார்ச்) பக்கம் : 12 விலை : 30.00



## காலம் காலமாக உரிமை - அடையாளம் - தனித்துவம் பேண

# போராடும் தமிழர் சமூகதாயம்

05ம் பக்கத்தில்

## விடுதலையாகிறார் பிள்ளையான்..???




பக்கத்தில் 04




பக்கம் 09

## தொடர் நாடகங்களும் தொலைந்து போகும் கல்வியும்...



## வேதங்கள், மந்திரங்கள், சாஸ்திரங்கள் அனைத்தும் உண்மையா?



பக்கம் 04

## உள்ளூராட்சி மன்ற தேர்தலும் தமிழர் தம் தலைமைகளும்

## கலைஞர் கௌரவம்



கிழக்கு போற்றும் கலைஞன்
மூத்த படைப்பாளி, சகலகலா வல்லவர்
அமரர்
இரா. பத்மநாதன்

பக்கம் 11

உள்ளே... புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான நுண்ணறிவு பயிற்சி வினாக்கள்




அம்மு சைவ உணவகம்
AMMU VEGETARIAN RESTAURANT
HIGH QUALITY VEGETARIN RESTAURANT உயர்தர சைவ உணவகம்



509, NEW KALMUNAI ROAD, MANCHANTHDUWAI, BATTICALOA. TEL. : 065 43 95 379, 076 7 222 44 8

## “பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ்வார்”

ஐம்பொறி வாயிலாகப்பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்கநெறியில் நின்றவர் நிலைபெற்ற நல்வாழ்க்கை வாழ்வார்.

# இனியும் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது

தமிழ் மக்களுக்கென்று குரல்கொடுப்பதற்கு களம் இறங்கிய கட்சிகள் தமிழ் மக்களுக்காக ஒற்றுமைப்படவேண்டும்.இதனை உண்மையில் தமிழ் மக்களின் மீது பற்றுக்கொண்டவர்கள் முன்னெடுத்துச்செல்ல வேண்டும். அறுபது வருட போராட்டத்தில் நாம்சாதித்தது என்ன என்பதனை ஆழமாக சிந்தித்துப் பார்த்தோமையானால் வெறும் வேதனை சுமந்த வரலாறுகள் தான் இந்த வேதனையினை சுமந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்மக்களிற்கு நிம்மதியான வாழ்வைப் பெற்றுக்கொடுக்காது பிரிந்து நின்று பழையவற்றை எல்லாம் கிளறிப்பார்த்து பழிவாங்கி ஒதுக்கி வைத்து எதனையும் சாதிக்க போவதில்லை இனிவரும் எதிர்கால சந்ததியினர் நிம்மதியாக வாழ்வதற்கான சூழ் நிலைகளை உருவாக்கவேண்டும்.

தன்னலம் சார்ந்த அரசியல் எண்ணங்களை களைய வேண்டும். ஒவ்வொரு அரசியல் தலைமைகளையும் அரசியல் கட்சிகளையும் நம்பி ஏமார்ந்த மக்கள் இன்று தமது ஒற்றுமை உணர்வுடன் உறவுகளைதேடியும், ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த காணியை மீளக் கையளிக்க வேண்டும் என்றும் தொழில்வாய்ப்பினை பெற்றுத்தரவேண்டும் என்று, வீதியில் இறங்கி போராட வேண்டிய துன்பகரமான நிலை தமிழ்மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. இதனை இந்த நிலைக்கு கொண்டு வந்தது யார்? காரணம், பெரும்பான்மை சமூகத்தின் உரிமைகள் சிறுபான்மையினருக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக தன் உயிரை மாய்த்துப் போராடிய அத்தனை போராட்ட உணர்வாளர்களையும் சிந்தித்து பார்க்காத சில தமிழ்த் தேசியவாதிகள் சிலருக்கு தமிழ்த்தேசிய இதயம் இப்போது துடிப்பது வேதனையாக இருக்கின்றது. சுகபோக வாழ்க்கையில் வாழ்ந்தவர்கள் எல்லாம் இன்று மக்கள் மத்தியில் நல்லவர் போல் வலம் வருவதனை பார்க்கின்றபோது ஏதோ அவர்கள் தான் இத்தனை காலமும் மக்களுக்காக பாடுபட்டவர் போன்று காட்டிக்கொள்கின்றனர். ஆனாலும் இத்தகைய மாறுவேடம் தரித்தவர்களை மக்கள் நன்றாக அறிந்து கொண்டுள்ளனர். அவர்களுக்கு தக்க பாடம் புகட்டுவதற்கு சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தனர். அத்தகைய சந்தர்ப்பத் தினை கடந்த உள்ளூராட்சி சபைத்தேர்தல் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

எனவே இன்னும் மக்களை ஏமாற்றாது அண்மைக்கால சம்பவங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு தமிழ்மக்களுக்கு போராடவே என்று அரசியலில் குதித்துள்ள தலைமைகள் ஒரு தீர்க்கமான அரசியல் பாதையில் அனைத்து கட்சிகளையும் ஒருங்கிணைத்து விட்டுக்கொடுப்புடன் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொடுக்க போராடவேண்டும். அதனை விடுத்து இன்னும் பிரிவினையும் பழிவாங்கல்களும் தொடருமாக இருந்தால். பெரும்பான்மை அரசிடமிருந்து இன்னும் அறுபது வருடங்களை கடத்த வேண்டும். அடுத்த சந்ததியினரை கடவுளாலும் காப்பாற்றமுடியாமல் போய்விடும் நிலைதான் ஏற்படும். எனவே இன்னும் மக்களை ஏமாற்றாது சரியான அரசியல் பாதையில் அரசியல் தலைமைகள் பயணிக்க வேண்டும் என்பதுதான் அனைத்து தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# பாடசாலைகளுக்கு அப்பிள் சமூக மேம்பாட்டு அமைப்பின் உதவிக் கரம்

**தொகுப்பு : ஞா. பிரகாஸ்**

அம்பாறை மாவட்டம் மல்வத்தை பிரதேசத்தில் இயங்கி வரும் அப்பிள் சமூக மேம்பாட்டு அமைப்பினால் நான்கு பாடசாலைகளுக்கு. பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் (08) இடம்பெற்றது.







இந்த நிகழ்வில் மல்வத்தை கிராமத்திலுள்ள சது. விபுலானந்தா மகா வித்தியாலயம், சது. அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, சது. விக்னேஸ்வரா வித்தியாலயம் மற்றும் சது. சீர்பாததேவி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் பொருட்டு முன்மொழிவு திட்டக்கோவை ஒன்றும். பாடசாலை உபகரணங்களும். மாணவர்களுக்கு கொப்பிகளும் கையளிக்கப்பட்டிருந்தது.

மேலும் இதே போல் இனி வரும் காலங்களில் தவணை பரீட்சை பெறுபேறுகளை வைத்து மாணவர்களை கௌரவிப்பதற்கும், குறைந்த பெறுபேறுகளை பெறுகின்ற மாணவர்களை கண்டறிந்து இயன்ற உதவிகளை வழங்கவும், இறுதி தவணையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்ற மாணவர்களை பெற்றோர் முன்னிலையில் கௌரவிக்கவும், புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் ஆலோசனைகள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்த திட்டமிட்டிருப்பதாக குறித்த அமைப்பின் தலைவர் இ.இராஜசேகர் தெரிவித்தார்.


**தமிழ் ஓசை பத்திரிகையினை சந்தாமுறையில் பெற்றுக் கொண்டு ஊக்கப்படுத்துங்கள்.**




| | |
|---|---|
| காலாண்டு | - 90/= |
| அரையாண்டு | - 180/= |
| வருடாந்தம் | - 360/= |

(தபால்செலவு உள்ளடக்கப்படவில்லை)

**தமிழ் ஓசை**
இல. 184, பஸார் வீதி, மட்டக்களப்பு.
தொ. பேசி இல.: 077 318 00 33 | மின்னஞ்சல் : thamilosai7@gmail.com




“நீ சிறந்தவனாய் திகழ விரும்பினால் தன்னடக்கமும், பணிவும் கொண்டவனாய் இரு”



# ஞாபகங்கள்

அகத்தில் மலந்த றோஜாவே.
உன்னை அணைத்து எடுக்க பல காலம்
புன்னகைப் பூவே புகுந்தது வாசம்
பூத்தது  பூ புதுவசந்தம் வீசியது.

 மழைக்கால இருளில் மதி மயங்கும் போது.
ஒற்றை குடையுடன் ஓடி ஒதுங்கிய
ஆலமரமும் தெருவோர கடையும்
நமது ஞாபகத்தை சொல்லுமல்லவா.

வேப்பமரத்து பிள்ளையர் கோயிலில்
வேள்விகள் நடந்த போது.
என் நெற்றியில் நீ வைத்த சந்தனம்
இன்னும் பத்திரமாய் இருக்குதடி.

ஒற்றை பாலத்தில் நாம் நடந்த போது.
தாவி தாவி என்னை இறுக பிடித்த நேரம்
காலம் கடந்த போதும்
கண்ணுக்குள் நிழலாடுகிறது..

எனக்காக நீ தந்த காதலர் தின
பரிசான கடிகார.
செக்கன் முள்ளு செக்கனுக்கு செக்கன்
துடிக்கும் போது.
உன் நினைவுகள் நெஞ்சோடு மோதுகிறது.

**கவிஞர் த. ரூபன்**
திருகோணமலை – இலங்கை.



# படுவானும் நானும்

பச்சை கண்டால்
இச்சை ஊறும்
படுவானே உனை
பகைவனும் தொழுவானே.

வீரத்தின் உறைவிடமாகவும்
விளை நிலத்தில் உயர்
நிலமாகவும் பண்புற்ற தமிழ்
மாந்தர் வாழும் ஈழத்தின்
பவித்திர பூமியாகவும்.
விழங்கும் படுவான் கரை
மண்ணை நினைக்கையில்
நெஞ்சுரத்தின் தடாகத்தில்
பல நினைவுகள் நீச்சலடிக்கிறது...!!

வற்றாத நீர் நிலையும் வளம்
கொளிக்கும் மண்ணின்
புகளையும் பற்றாக நான்
இருந்து பல கவிகள்
பாடினாலும். மனதில் புற்றாக
முளைக்கிறது புதிய வரிகள்...!!

மை சிந்தும் பேனாவின்
வரிகளுக்குள் அடக்கி விட
முடியாது எம் மண்ணின்
பெருமையை...!!

நிலவு மகள் பாய் விரிக்க
நீல் வானம் நதிகள் தொட
புலராத பொழுதினிலும்
மனதில் மலரும் எம் மண்ணின்
இனிமையான நினைவுகள்...

மனதில் வேரூன்றி நிற்கும்
எம் மண்ணின் பசுமையான
நினைவுகளை மீட்டுப்
பார்க்கையில்.......
வரண்ட நிலத்தில் மழை
பெய்தாற் போல்
மனமெனும் வயலில் பல
வரிகள் முளைக்கிறது...

தொடு வானம் துகில்
களைய நெடு வானில்
நீலமதை கருமேக இருள் சூழ...

மாரி மழை பொழிய
மதுரங்கிளி புதர் தேட
கோணிய முகத்துடன்
கொக்குகள் குரவையிட
நாணிய முகத்தோடு நங்கை
அவள் உடல் நனைய.

குளிர்ந்த தேகத்தோடு கொடி
இடையாள் நடை பயில
வீசிடும் தென்றலில்
விளைந்த நெற் கதிர்கள்....

ஊசித்தூற்றலில் உரசி நின்று
கதை பேச....

மயில்கள் நடனமிட
வான் கோழி வாழ்த்துரைக்க
வாழை பலா தென்னை என
வழங்குன்றாத் தேசத்தில்...

தோன்றினான் என் பிரான்
சோலையூரின் சன்னிதியில்
கூடி நின்று நாம் தொழவே
கோடி இன்பம் நல்கிடுவான்
கொக்கட்டிச் சோலையூரின்
தான் தோன்றி ஈசனவன்...!!!

பட்டிப் பளையில் புலி
பதுங்கிய காரணத்தால்
கொட்டி ஊர் எனக்
கொடியவன் அளைக்க.
தோட்டாக்கள் விளைந்த
நிலத்தில் துப்பாக்கிகள்
கதை பேச.

பட்டி தொட்டி எங்கும்
வீரப் பறைசாற்றும் படுவானே
உனைப் பகைவனும்
தொழுவானே..!!!

**நிதாகரன்**
மட்டக்களப்பு – மகிழடித்தீவு

# கிழக்கிலங்கையின் முதல் தமிழ் நாவல் “அரங்கநாயகி”

Sir Walter scott அவர்களால் 1821 இல் ஆங்கிலத்தில் இயற்றிய Kenil Worth எனும் கதையைத் தழுவி 1934 இல் அரங்கநாயகி எனும் பெயரில் தமிழ் நாவலாக அமரர்.வே. ஏரம்பமுதலி அவர்கள் வெளியிட்டார். இக்கால கட்டத்தில் அவர் மூதூர் பெரும் பாகத்திற்கு நீர்ப்பாசன அத்தியட்சகராகவும் கடமை புரிந்திருந்தார். அவருக்கு இருந்த வேலைப்பழுவிற்கு மத்தியில் மின்சார வசதி இல்லாத சூழலில் இவ்வாறு ஒரு நாவலை எழுதி வெளியிட்டு இருக்கின்றார் என்றால் அது அவரது விடாமுயற்ச்சியாகும். தமிழ் இலக்கிய உணர்விற்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இந்நூலாசிரியர் தமிழில் மட்டுமல்லாது ஆங்கில மொழியிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர் என்பது புலனாகிறது.

"அரங்கநாயகி” கிழக்கிலங்கையின் 1வது தமிழ் நாவல் என்ற பெருமையைப் பெறுகின்றுது. இக்கால கட்டத்திலேயே நாவல் ஒன்றை எழுதி வெளியிட்டவர் இலங்கையில் மிகவும் ஒரு சிலரால் அவ்வப்பொழுது உரைச்செய்யுள் பாற்செய்யுள் சம்மந்தமான சில சிறிய பிரதிகள் வெளிவந்துள்ளது. எனினும் இவ்வாறு சிரமப்பட்டு இப்படியொரு நாவலை எழுதி அச்சுவாகனம் ஏற்றிவித்து வெளியிட்டார். இதுவரை நான் அறிந்தளவில் ஒருவரும் இல்லையென்று கூறுகின்றேன். எனவே மட்டக்களப்பில் இருந்து இனிமேல் வெளிவரும் கதை நூல்களுக்கெல்லாம் முதல் இடத்தை இந்நுல் பெற்றதும் இதன் ஆசிரியர் முதன் ஆசிரியர் எனப்படுவதும் தனி சிறப்புக்களாகும். பாடசாலையில் படிப்பிப்பதற்காக குறிப்பிட்ட ஒரு புத்தகத்தை வாசித்து அதை இவ்விதமாக வெளியிட்ட பெரும் தகையை நினைக்கும் போது எமக்கு ஓர்ஆதங்கமும் அன்புமே உண்டாகின்றன. இதில் இருந்தவரின் இரு பாஸையும் ஆசிரியர் எழுதிய இந்நூலில் சிறிய கவனம் செலுத்தி சில மொழிகள் கூற கடமைப்பட்டு இருக்கின்றேன். இந்நூல் பற்றி மதிப்புக்கூறிய அறிஞர்கள் பலர் இந்நூலின் உள்ளுரையை ஆழ்ந்து கூறியிருக்கிறார்கள். இது ஓர் கற்பனைச்சரித்திரம் என்று கூறுவதற்கு இல்லை இதன் ஆசிரியர் அவர்களே இவ்விதம் கூறவும் இல்லை ஆகவே மேல் நாட்டில் நடந்த உண்மை நிகழ்வுகளை தொகுத்தும் விரித்தும் நீக்கியும் நம் நாட்டவருக்கு பயன்படுத்தும் முறையில் பண்படுத்தி வெளியிட்ட ஓர்நூல் என்று கூறுவதே சாலப்பொருந்தும்.

அச்சு பொறியின் ஆதிக்கம் வளஞ்ச்சி பெற்ற வந்த இந்நாறில் மக்கள் மக்கள் வாழ்க்கைக்கு பயன்படும் நூல்கள் பலவும் பயன்படாத வியாபார முறைகொண்ட

**சின்னத்தம்பி வடிவேல் B.A**

நூல்கள் பலவும் மலிந்தும் பொலிந்தும் விளங்குவதை நாம் கண்டும் கேட்டும் இருக்கின்றோம் இவைகளின் ஊடே இந்நூலை வாசிக்கும் ஒவ்வொருவரும் இந்நூல் ஆசிரியரின் முதல் படைப்பு என்பதை மனதில் வைத்துக்கொண்டு ஓர் முறைக்கு பலமுறை வாசித்து உரிய பலனை பெறுவார்களாக.

சில ஆசிரியர்கள் தங்களது யதார்த்தத நூலில் தங்கள் அறிவாற்றல் ஒன்றை குறிக்கோளாகக்கொண்டு கடின மொழிகளைப்பயன்படுத்தி சாதாரன அறிவுடையோருக்கு விளங்காத மொழிகளால் அலங்கரித்து வெறளியிட்டிருக்கின்றனர்.இந்நூலில் எந்தவித பிழைகளைக்காண இறலாது.அற்ப கல்வியுடையாரும் வாசித்து விளங்கக்கூடிய இனிய தமிழ் நடையில் ஆக்கப்பட்டிருப்பது போற்றத்தக்கதாகும்.

இதில் ஆங்காங்கு கூறப்பட்டிருக்கும் நன்மதிகள் கதைத்தொடர்பின் அருமை பெருமைகள் பலநீதிகள் ஆச்சரிய சம்பவங்கள் நீதி இரக்கம் சமரசம் முதலிய சில முக்கிய போதனைகள் துன்மார்க்க சீவியத்தின் பிரததிபலன்கள் கற்பனை அலங்காரங்கள் முதலியனவை தற்கால நவீன நாகரிகத்தில் ஈடுபட்டிருக்கும் ஆண் பெண் இரு பாலாருக்கும் நன்மை பயக்காது விடாதென்பது என் துண்வு.

இந்நாவலின் பெருமை மறைந்து போவதை பொறுக்க முடியாத அவரது மகள் திருமதி.ந.காந்திமதி அவர்கள் தனது தந்தை 1934 இல் அச்சிட்டு வெளியிட்ட அரங்கநாயகி என்னும் நூலை தனது 83வது வயதில் 2ம் தரம் மீள் பதிப்புச்செய்து இலக்கிய உலகிற்கு பணிவன்புடன் சமர்ப்பிக்கும் சமயத்தில்

“படைப்பாளிகளை யாராலும் அகற்றிவிட முடியாது” என்று தனது தந்தை கூறிய வாக்கியத்தை பின்வருமாறு கூறியிருப்பது சகலரது மனதையும் தொட்டு விடடு ஓர் செயலாகும்.

“கடற்கரை ஓரத்தில் மண்ணில் பதிந்த பாதங்களை கடல் அலைகளினால் அகற்றிவிடலாம். ஆனால் படைப்பாளியின் படைப்புகளை யாராலும் அகற்றிவிடமுடியாது”

“வாழை அடி வாழையாக” தந்தையின் இலக்கிய உணர்வும் மங்காது புகழுடன் வாழ வேண்டும் என்ற அமரர். வே. ஏரம்பமுதலியின் மகளான திருமதி.ந.காந்திமதி அவர்களின் முயற்சியும் தைரியமும் பெரிதும் பாராட்டுக்குறியது.






# 2018 உள்ளூராட்சி மன்ற தேர்தலும் தமிழ் தலைமைகளும்

நடந்து முடிந்துள்ள 2018 இன் இலங்கையின் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முடிவுகளானது. சமகால அரசியல் தலைமைகளுக்கு மிகவும் உறுதியான சில விடையங்களைக் கூறுவது போல் அமைந்துள்ளது. தென்னிலங்கை மக்களால் துட்டகைமுனு என வர்ணிக் கப்படும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ வின் மீள் எழுச்சியானது மஹிந்தவின் பிரசன்னம் இல்லாமல் தமிழர்களுக்கான தீர்வு சாத்தியம் இல்லை என்பதனை பறைசாற்றுகின்றது. தென்னிலங்கை மக்கள் இரு பெரும் பழைய தேசிய கட்சிகளை புறந்தள்ளி ஸ்ரீலங்கா பொதுசன பெரமுன என்கின்ற தாமரை மொட்டு சின்னத்தை கொண்ட கட்சிக்கு அளித்திருக்கும் ஆதரவானது மஹிந்த ராஜபக்ஸ என்கின்ற ஒரு தனி மனிதனுக்கு சிங்கள மக்களிடையே இருக்கின்ற செல்வாக்கை சாட்சி கூறுகின்றது. தென்னிலங்கை சிங்கள மக்கள் இவ்வாறு இருக்க வடகிழக்கில் தமிழர்களின் ஏகபிரதிநிகள் என மார் தட்டும் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பினர் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளனர் குறிப்பாக மட்டக்களப்பில் 2015ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மொத்தமாக செல்லுபடியான வாக்குகளில் 53.25% வாக்குகளைப்பெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் 27.7% வாக்குகளை மாத்திரம் பெற்று பாரிய வீழ்ச்சியைப் பெற்றுள்ளது. இந்த வாக்கு வங்கியின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அரசியல் விமர்சகர்களால் முன் வைக்கப்படும் விடயம் இறுதியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கூட்டாட்சி நடத்திய கிழக்கு மாகாண சபையினால் தமிழர்கள் அனுபவித்து வந்த துன்ப துயரங்களே ஆகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இணைந்தமைக்கான பிரதான காரணமாக அவ் வேளையில் மாகாணசபையில் இருந்த முஸ்லிம்கள் எல்லோரும் ஓரணியில் திரளமுற்பட்டதே என அக்காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமைகளால் கூறப்பட்டது. ஆனால் உண்மையில் கிழக்கு மாகாண சபையில் தமிழர்கள்-13 சிங்களவர்கள்-9 மற்றும் முஸ்லீம்கள்-15 பேராக காணப்பட்டனர். பிள்ளையான் மற்றும் தயா கமகே ஆகியோர் ஆதரவாக சமிஞ்சைகள் காட்டிய போது அதனைத் தட்டிக் கழித்து சிறுபான்மைக் கட்சியுடன்தான் இணைவது என்ற முட்டாள் தனமான முடிவே தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் வீழ்ச்சிக்கு காரணமாகும். இவர்கள் மாகாண சபையில் ஆட்சி நடாத்தும் போது முதலமைச்சராக இருந்த ஹாபிஸ்நசீரினுடைய தான் தோன்றித் தனமான முடிவுகளே மக்களை வெறுப்படைய செய்துள்ளது எனலாம். இந்த நிகழ்வுகளை பாடமாக கொண்டிருந்தும் தற்போது நடைபெற்று முடிந்திருக்கின்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பின் யார் யாருடன் சேர்வது என்கின்ற முயற்சியில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மீண்டும் வழுக்கிறது போல் தோன்றுகின்றது, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மொத்த உள்ளூராட்சி சபை ஆசனங்களில் 30 வீதமான ஆசனங்களை தமிழ் தேசிய கூட்டமைப்பும் தலா 15 வீதமான ஆசனங்களை ஐக்கிய தேசிய கட்சியும் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் பெற்றிருக்கின்றன. இந்த நிலையில் ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணி வைக்க முயற்சிகள் நடப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். ஆனால் மட்டக்களப்பு மக்களின் ஆணைக்கினங்க தமிழ் கட்சிகளுடன் மாத்திரம் தான் தமிழ்தேசிய கூட்டமைப்பு இணைய வேண்டும் எனவும் பரவலான கருத்துக்கள் எழுகின்றன. இந்த வகையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி இணைவதற்கு தயாராகும் அதே வேளை அதனை தட்டிக் கழிப்பது போன்றே தெரிகின்றது. தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் இராணுவத்தின் ஒட்டுக்குழுக்களாக செயற்பட்டனர் மற்றும் தமிழர்களைக் கொலை செய்தனர் போன்ற குற்றச்சாட்டுகளை அவர்கள் மேல் செலுத்தி ஐக்கிய தேசியகட்சி போன்ற பேரினவாத கட்சியுடன் இணைப்பை சாத்தியமாக்க சமகால தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமைகள் முயல்கின்றன. அவ்வாறு நோக்கும் போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் TELO,PLOTE போன்ற வர்களிடமும் முன்னர் அங்கம் வகித்த EPRLF(S) போன்றவர்கள் இராணுவ ஒட்டுக்குழுக்களாக செயற்பட்டு பல தமிழ் புத்தி ஜீவிகளை கொலை செய்தவர்கள் தான் என்பதை மறந்துவிடவோ மறுக்கவோ முடியாது. யாழ்ப்பாணத்தில் EPDP ஆதரவைப் பெற்று ஆட்சியமைக்க முடியுமெனின் மட்டக்களப்பில் ஏன் TMVP இணைத்து ஆட்சியினை அமைக்க முடியாது என தற்போது மக்கள் மத்தியில் கேள்விகள் எழுந்துள்ளமையை அவதானிக்க முடி கின்றது.

**- யாரோ -**

தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற அனைத்து கட்சிகளின் தலைமைகளும் வடக்கை அடிப்படையாக கொண்டே தீர்வுகளை முன் மொழிகின்றனர். வடக்கில் பயன்படுத்துகின்ற அதே தந்ரோபாயங்களை கிழக்கில் ஏன் பயன்படுத்த முடியாது என்கிற அடிப்படையை இன்னமும் இத்தலைமைகள் உணராமல் உள்ளனர் கிழக்கை பொறுத்தவரை தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாக்கப்பட்டு வருவதை யாவரும் கண்கூடாக பார்க்கின்ற உண்மை. ஆகவே சமகால அரசியல் நகர்வுகளை நுணுக்கமாக ஆராய்ந்து தமிழர் நலன் சார்ந்த முடிவுகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எடுக்கும் என்ற நம்பிக்கையில் இன்னமும் கிழக்குத்தமிழர் நம்பிக் கொண்டிருக்கின்றனர். இந்த நம்பிக்கையை சிந்திக்காது தமிழ்தேசிய போராட்டங்களை கருவறுத்த பேரினவாத கட்சிகளுடன் கூட்டுச்சேராமல் கிழக்கில் இருக்கின்ற அனைத்து தமிழ் கட்சிகளையும் திரட்டி ஒரு குடையின் கீழ் கொணர்ந்து கிழக்கு மாகாண சபையை தமிழர் வசப்படுத்துகின்ற சந்தர்ப்பத்தை நழுவ விடாது தமிழ் தேசிய கூட்டமைப்பு வென்று தனதாக்கிக் கொள்ள வேண்டிய நிலையினை உருவாக்க வேண்டும் என்பது மக்களின் ஏகோபித்த கருத்தாக உள்ளது.

## விடுதலையாகிறார் பிள்ளையான்...?



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) அவர்கள் விடுதலையாவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் மீதான படுகொலை குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டு கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக பிள்ளையான் சிறைப்படுத்தப்பட்டுள்ளார். நல்லாட்சி அரசு உருவாக்கப்பட்ட போது ஒத்துழைப்பு வழங்கிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மீதான நன்றியுணர்வை காட்டுமுகமாக அரசு மேற்கொண்ட அதியுச்ச விசுவாச நடவடிக்கை ஒன்றாக இந்த சிறைப்படுத்தலை பிள்ளையானின் ஆதரவாளர்கள் அப்போது கருதினர். இந்த நிலையில் தான் பிள்ளையானின் சட்ட வல்லுனர்கள் அவர் மீதான குற்றச்சாட்டுகளை ஒவ்வொன்றாக களையெடுத்து கடந்த தவணையுடன் முக்கியமான சாட்சியம் தொடர்பான நம்பிக்கையீனத்தையும் வெளிப்படுத்தி அதனையும் வலுவிழக்கச் செய்துள்ளதாக அவரது ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர். எது எப்படியாகினும் இனிவரும் காலங்களில் குறித்த வழக்கை நடாத்தி வரும் சட்டமா அதிபர் திணைக்களம் கூட வழக்கு விசார ணைகளின்போது சில விட்டுக்கொடுப்புகளை அல்லது நெகிழ்வுத் தன்மையை காண்பிக்கலாம். என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். வடகிழக்கில் மிக பலம் பொருந்திய கட்சியாக தம்மை காண்பித்து வந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பை சிதைத்து நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிள்ளையானது கட்சி 42000 ற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று தாமும் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட கட்சி என நிரூபித்தமை இந்த நெகிழ்வுக்கு காரணமாக இருக்கலாம். பிள்ளையான் சிறையிலுள்ள நிலையிலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அரசியல் ரீதியாக பலமாக உள்ள நிலையிலும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி பெற்ற வாக்குகள் ஆச்சரியமானதே. தெற்கில் மேலெழும் மகிந்த ராஜபக்ஸ மீதான ஆதரவுத் தளம் பிள்ளையான் போன்றவர்கள் மூலமாக கிழக்கிலும் வியாபித்தல் சிறுபான்மை வாக்குகளை எதிர்பார்த்து ஆட்சியமைக்க காத்திருக்கும் மைத்திரி ரணில் கூட்டிற்கு ஆபத்தானது எனும் அனுமானமும் கூட சட்டமா அதிபர் திணைக்களத்தில் செல்வாக்கை செலுத்தலாம் பிள்ளையானுக்காக வாதிடும் சட்டவாளர்களின் கருத்துப்படி,கொலையை செய்தவன் தனது எஜமான் யார் என்பதை சாட்சியாக கூறும் வரையிலும் பிள்ளையான் கொலைக்குற்றத்திற்கான பிரதான சூத்திரதாரியாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே வழக்கு முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. கொலையாளி இன்னும் இனம் காணப்படாத நிலையில், கொலையாளி உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ என்றறியாத நிலையில் ஒரு வேளை கொலையாளி இறந்நிருக்கலாம் என்ற சந்தேக நிலையில் பிள்ளையான்தான் கொலையாளி என்பதை நிரூபிக்க முடியாது. என்பது அவர்களது வாதமாக உள்ளது. எது எப்படியோ,உருவாகிய அரசியல் மாற்றம் பிள்ளையானை விடுதலை செய்யும் காலாக அமையும் என அவரது ஆதரவாளர்கள் வலுவாக நம்புகின்றனர்.

**- வேல் மகன்-**



# காலம் காலமாக

## உரிமை - அடையாளம் - தனித்துவம் பேண

# போராடும் தமிழர் சமூகதாயம்

நாட்டில் நிலவும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நிலையான நீதி மற்றும் நிலையான அமைதித் தீர்வு எட்டப்படுவதற்கு கூட்டாட்சி மாத்திரமே ஒரேயொரு வழி என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில் செவ்வி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

அந்தவகையில் இலங்கையில் கடந்த 3 தசாப்த கால யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் கடந்த மூன்று வருடங்களாக இலங்கையில் ஆச்சரியப்படத்தக்க சில அரசியல் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. நல்லாட்சி மாற்றத்தின் பின்னர். ஆழமான சில சீர்திருத் தங்கள் மேற்கொள்ளப்படாவிட்டாலும் கூட இக்கூட்டணி அரசாங்கமானது சரியான திசையில் நாட்டை வழிநடத்திச் செல்வதற்கான சில நகர்வுகளை மேற்கொண்டன. இந்தவகையில், நாட்டின் தற்போதைய விவகாரங்கள், தமிழ் அரசியல், மேலும் கருத்துள்ள மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான வழிமுறைகள், அனைத்துலக சமூகத்திடமிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நீடித்து நிலைத்து நிற்பதற்கான சில தேவைகள் போன்றன தொடர்பாக தமது செயற்பாடுகளைச் சரி வரச் செய்துவருவதாகக் கூறினாலும் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயத்தில் மக்கள் திருப்தியடையாத நிலையே காணப்படுகின்றது.

எனினும் நல்லாட்சியின் தற்போதைய நிலவரத்தில் வடக்கில் மட்டுமல்லாது, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் முன்னரை விடத் தற்போது ஜனநாயக ஆட்சி இடம்பெறுகிறது. எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அவரது அரசாங்கத்தால் வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும், வடக்கு கிழக்கு மாகாண மக்களின் எதிர்பார்ப்புக்கள் இதுவரையிலும் முழு அளவில் நிறைவேற்றப்படவில்லை. சிறிலங்கா இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்கள் மக்களிடம் மீளவும் கையளிக்கும் நிகழ்வு மிக மெதுவாக இடம்பெறுகின்றது. விடுவிக்கப்பட்ட நிலங்களில் கூட முழுமையான மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை அத்துடன் அங்கு போதிய வசதிவாய்ப்புக்கள் இன்றி மக்கள் துன்புறும் அவல நிலையே அதிகம் நிலவுகின்றமையை காணலாம். இவ்வாறான நடவடிக்கைகளை நோக்குகின்ற போது மத்திய அரசாங்கத்தின் மேலாதிக்க மனோநிலை தற்போதும் தொடர்கிறது என்றே தமிழ் மக்கள் அச்சம் கொள்கின்றனர். வட கிழக்கிற்காக திட்டங்கள் தயாரிக்கப்படும் போது அவை தொடர்பாக மாகாண நிர்வாகத்துடன் எந்தவொரு கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படுவதில்லை. எப்போதும் மத்திய அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குச் சாதகமாகவே திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் ஏனைய மாகாணங்களுக்கான திட்டங்கள் தயாரிக்கப்படும் போது அந்தந்த மாகாண சபைகளுடன் கலந்துரையாடப்பட்டே தயாரிக்கப்படுகின்றன என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஆட்சி மாற்றத்தின் பின்னரும் இதற்கு விதிவிலக்காகவே உள்ளன.

தமிழர்கள் இனத்தால் வேறுபட்டவர்கள். எமது கட்சிகள் வேறுபட்டன. நாங்கள் வேற்று மொழியைப் பேசுகிறோம். எமது கலாசாரம் வேறுபட்டது. இவ்வாறான காரணங்களுக்காக மத்திய அரசாங்கமானது எம்மீது தனது மேலாதிக்கத்தைச் செலுத்தாது சம அளவில் இன நல்லுறவுக்கு வழிவகுப்பதே நாட்டின் ஆரோக்கிய அரசியலுக்கு அடித்தளமாகும். இதற்காகவே 1987



> நல்லாட்சியின் தற்போதைய நிலவரத்தில் வடக்கில் மட்டுமல்லாது, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் முன்னரை விடத் தற்போது ஜனநாயக ஆட்சி இடம்பெறுகிறது. எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அவரது அரசாங்கத்தால் வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும், வடக்கு கிழக்கு மாகாண மக்களின் எதிர்பார்ப்புக்கள் இதுவரையிலும் முழு அளவில் நிறைவேற்றப்படவில்லை.

இந்திய- இலங்கை உடன்படிக்கைக்கு அமைவாக தமிழர்களுக்கான அதிகாரங்களைப் பகிர்ந்து தருமாறு தமிழ்த் தலைமைகள் கோரிக்கை விடுத்திருநதனர். இத்தீவு முழுவதிலும் மாகாணசபை முறைமை நிறைவேற்றப்பட்டது. இதன் விளைவாக, எமது உரிமைகள், அபிலாஷ'கள் மற்றும் எமது பிரச்சினைகள் கவனத்திற் கொள்ளப்படாது புறக்கணிக்கப்பட்டன. அவற்றின் புறக்கணிப்புக்கள் இன்றுவரை தொடர்வதே மக்கள் தங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்வதில் பாரிய சிக்கலை தோற்றுவித்துள்ளது.

இனப் பிரச்சினை தொடர்பில் நிலையான நீதி மற்றும் அரசியற் தீர்வை எட்டுவது தொடர்பில் தமிழ்கள் மத்தியீல் நம்பிக்கை ஏற்படுத்துவதற்கு எதிர்வரும் காலங்களில் கூட்டணி அரசாங்கமானது பல்வேறு நகர்வுகளை முன்னெடுக்க முடியும். ஆனால் அதனை விரைந்து செய்படுத்துமா என்பதிலேயே குழப்பங்கள் தோன்றுகின்றன.

அந்தவகையில் வட கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கமானது தீவிர அக்கறை கொண்டிராத போது இவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுக்க முடியும்? ஜெனீவாவிலுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர் ஆணையாளரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான எந்தவொரு நகர்வையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் வழங்கப்பட்ட உறுதிப்பாடானது முற்றிலும் நிறைவேற்றப்படவில்லை.

உண்மையில் அரசாங்கம் எமது பிரச்சினையைத் தீர்ப்பதில் தீவிர அக்கறை கொண்டிருக்குமானால், வடக்கு மாகாண சபையால் முன்வைக்கப்பட்ட தேசியப் பிரச்சினைக்கான தீர்வை நிறைவேற்ற வேண்டும். அதாவது அரசியல் யாப்பானது வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அடையாளங்கள் மற்றும் உரிமைகளை அங்கீகரிக்கக் கூடிய கூட்டாட்சி முறைமையை ஏற்றுக் கொள்ளும் போது மட்டுமே எமது தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும்.

எனவே இணைந்த கூட்டாட்சி முறைமை மட்டுமே இதற்கான ஒரேயொரு வழியாகும். வடக்கு கிழக்கில் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக வாழும் தமிழ் மக்களின் வரலாற்று சார் வாழ்விடங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பில் அரசாங்கமானது ஏதாவது சந்தேகம் கொண்டிருந்தால் அனைத்துலக சமூகத்தைச் சேர்ந்த வரலாற்று வல்லுனர்களிடமிருந்து ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறானதொரு ஆலோசனை பெறப்படுமிடத்து சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் தமிழ் மக்கள் தொடர்பான பிழையான கருத்தியல்கள் நீக்கப்படும். தமிழர்களாகிய நாங்கள் எமது அடையாளங்கள், தனித்துவங்கள் மற்றும் எமக்கான சிறப்புக்களைப் பேணிப்பாதுகாக்கவே விரும்புகிறோம். அதற்காகவே காலம்காலமாகப் பாடுபட்டுவருகின்றோம். எனவே இதனை உணர்ந்து செயற்படவேண்டியது தேசிய அரசாங்கத்தினது கடமையாகும்.

# வேதங்கள், மந்திரங்கள், சாஸ்திரங்கள் அனைத்தும் உண்மையா?



**ஆன்மீக குரு, மகா யோகி புண்ணியரெத்தினம் சுவாமிகள்**

மனிதம் மலினப் பட்டு விட்டது இறை பக்தியும் பிரார்த்தனைகளும் குறைந்து விட்டன மனிதன் கடமை தவறுகிறான் கேட்டால் கடவுளைக் குறை கூறுகிறான் சிலையாய் இருக்கும் கடவுள் அல்லது கடவுளராக ஏற்று தத்தமது மார்க்கங்களில் இன்றும் வழிபட்டு வருபவர்கள் மீண்டும். அதே உருவமேற்று வந்தால்தான் ஏற்று வழி நடப்பேன் என்பதுவும் இன்று மனிதனை மனிதனாக வாழ விடாமல் செயல் சக்தி அழிக்கப்பட்டு உணர்வு சக்தி மறைக்கப்பட்டு அனைத்துலக வாசிகளையும் அல்லலுறச் செய்கிறது. இந்த மாயை எனும் அழிவுச்சக்தி. காலத்தின் தேவைக்கேற்றவாறு இறைவனே அவதரிக்கிறார் அல்லது தனது தூதர்களை அனுப்பியவண்ணமேயுள்ளார். அதை அறியும் பக்குவத்தை மனிதன் வளர்த்துக் கொள்ளாத காரணத்தினால் இந்த அற்பமாம் ஜெகத்து மாயையில் அடிமைப்பட்டு தன்னை மிஞ்சிய ஆனால் தனக்குள் இருக்கும் அந்த இறையை அறிய முடியாதவனாய் ஆன்மீகம் என்ன கூறுகிறது ஆன்மா எங்கிருக்கிறது அதை எந்த வழியில் அறியலாம் என்ற தன்மை இழந்தவர்களாய் காணப்படுகின்றனர்.

வேதங்கள், மந்திரங்கள், சாஸ்திரங்கள் அனைத்தும் உண்மையே அவைகளின் உருவாக்கம் மனிதனை புனிதனாக வாழவைப்பதற்கேயன்றி அவனைபடுகுழியில் தள்ளுவதற்காக தோற்றம் பெற்றவையல்ல. இன்றைய சூழலில் தந்திரங்கள் தீய எண்ணப் பிரவாகங்கள் யாரை எப்படி கெடுப்பது உபத்திரம் விளைவிக்கும் எண்ணம் இவையே மனிதனின் தீரா நோய்களுக்கும் துன்பத்திற்கும் கொலைகள் தற்கொலைகள் மரணங்கள் பஞ்சம் பசி பட்டினி இயற்கை சீற்றங்கள் அரசியல் குழப்பங்கள் ஆட்சி மாற்றங்கள் போன்றவற்றிற்கான மூல காரணிகள் எனலாம் இதை எவ்வாறு இல்லாதொழிக்கலாம் இதற்கு வழியே இல்லையா? என கேட்கலாம் ஏன் இல்லை பிரச்சினைகள் தோன்றுவது இயல்பு அதை இல்லாது செய்யவும் ஒரு வழியிருக்கும் தானே ஆனால் சாதாரண தனி மனிதனாலோ அல்லது மந்திரவாதியாலோ ஆலய பூசகராலோ மத போதகர்களாலோ இவற்றை இல்லாதொழிப்பதென்பது கடினமே காரணம் தன் மனதை அறியாத ஒருவரால் பிறர் மனதை தூய்மைபடுத்தி நல்வழிப் படுத்துவ தென்பது கல்லிலே நார் உரிப் பதற்கு சமனான ஒரு செயல் ஆக எப்படித்தான் இதை சரி செய்வது ஆம் சரி செய்ய லாம் அதை உணர்த்த சிறிய கதையொன்று உள்ளது ஆழமாக ஆழ்ந்து சிந்தித்தால் உண்மை புலரும்.

ஒரு மோட்டார் சைக்கிள் அல்லது மோட்டார் கார் திருத்துனர் தன் தொழிலின் நிமித்தம் அணிந்திருக்கும் உடை மிகவும் அழுக்கு நிறைந்திருக்கும் ஆனால் எந்தப் பாகத்தில் எப்பேற்பட்ட பழுதானாலும் அவரால் மட்டுமே பழுதுபார்க்க முடியும் ஏனெனில் அவர் அந்த வாகனத்தின் அங்கங்கள் அனைத்தையும் பற்றி ஆழமாக அறிந்துள்ளவர் அவ்வாறான பல வாகனங்களை திருத்தியமைப்பவர் ஆனால் வேலை முடிந்ததும் அழுக்கு படிந்த உடையினை களைந்து விட்டு தனது வீட்டுக்கு நல்ல சுத்தமான புதிய உடையினை உடுத்திசென்று விடுவார். இந்த கதை மூலம் மக்களாகிய நாம் புரிந்து கொள்ள வேண்டிய பேருண்மைகள் பலவுள்ளது தன்னை உணர்ந்த தன் மனதை அறிந்த ஒருவரால்தான் இன்னொரு கறை படிந்த நோய்வாய்ப்பட்ட மனத்திற்கும் உடலுக்குள்ளும் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் தன்மை காணப்படும் அந்த திருத்துனர்கள்தான் ஆன்மீகக் குரு ஞான குரு என காலம்காலமாக அவதரித்து ஞான உபதேசம் செய்கிறார்கள் செய்துகொண்டிருக்கிறார்கள் அதை அறிந்தவர்கள் பூரண சரணா கதியடைந்து அவ்வின்பத்தில் திளைக்கிறார்கள் அறியும் பக்குவமற்ற மனிதர்கள் மீண்டும் பிறப்பு மீண்டும் இறப்பு எனும் சுழற்சியில் சிக்கித் தவிக்கிறார்கள்

அழுக்குப் படிந்த திருத்துனரின் ஆடை போல ஞானிகளும் மக்கள் பாவங்களை தானேற்று தன் ஸ்தூல சரீரத்தினை மண்ணுலகில் விட்டு விட்டு விண்ணுலகிற்கு தன் உண்மை உடையோடு அதாவது ஒளிமயமான சூட்சும சரீரத்தோடு செல்கின்றனர்.

கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை என்ற நிலை போல நம் மக்கள் நிலையும் இன்று உள்ளது இது மதம் சார்ந்த இனம் சார்ந்த தொகுப்பு என்பதைக் கடந்து இறை என்பது பொதுவானது அந்த இறை சார்ந்த தொகுப்பு எனவே அனைவரும் ஏற்க வேண்டும்.

வாழையடி வாழையாக தொடரும் குரு மார்க்கம்
”குருவில்லா வித்தை பாழ்”
”குரு தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது” என்பதன் பேருண்மை இப்போது மெல்ல புலனாகும் காலம் கடந்த ஞானம் கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் போன்றது வெள்ளம் வரமுதல் அணை கட்டுவதே சிறந்தது பட்டுத் தேறித்தான் உணர்வேன் என்பது விதண்டாவாதம் வாதம் எனும் நோய்க்கு மருந்துண்டு விதண்டா வாதத்திற்கு மருந்தே கிடையாது அதே போல கலியியெனும் உடலில் கலந்துள்ள காலனை வென்று கல்கியெனும் ஆன்மாவோடு இரண்டற கலப்பதுவே கல்கியுகம் இதை யுணராமல் கலி முடியும் கல்கி பிறக்கும் என்றிருந்தால் எல்லாமே சூனியமயமாகித்தான் போகும். ஆர்ப்பாட்டம் ஆரவாரிப்பு கோசங்களை தவிர்த்து அங்கே ஒன்று கூடி கூட்டுப் பிரார்த்தனை வழிபாடுகளை அதிகப் படுத்திப் பாருங்கள் ஒன்றிணைந்த வழிபாட்டின் தன்மை அதன் நன்மை என்ன என்பதனை உடனுக்குடன் உணர்வீர்கள் நோயற்ற மனிதர்களாய் மனப் பலம் பொருந்தியவர்களாய் மரணபயம் அற்றவர்களாய்வாழலாம். நம் மனம்தான் நம் எதிரி எதை நினைக்கிறோமோ அதுவாகவே நாம்ஆகிறோம் அதுவே நம் அடுத்த பிறவியின் ஆரம்பம் ஆக நாம் தீயதை நினைத்து தீயதை செய்து தீமை தரவல்லவர்களாக மாறி பல பிணிகள் பீடித்த பின் ”இறைவா உனக்கு கண்ணில்லையா? ” எனக் கேட்டால் யாருக்கு கண்ணில்லை? நாம் அந்தந்த பிறவியில் எதை நினைத்து வாழ்ந்தோமோ எதை நினைத்து செய்தோமோ அதற்கேற்றவாறு பிறக்கிறோம் காரணம்

**தொகுப்பு:- அ.குகாந்தன்**

நம் எண்ணம் அதற்கு இறைவனை நொந்து என்ன பயன் கட+உள் = கடவுள் மனதை கடந்து உணர்வு நிலையில் உள்ளேயிருக்கிறார் கருவறை நம் மனம்தான் அங்கே அவரை காணவேண்டும் அதை கண்ட மனிதனே முக்தியின்பம் வீடுபேறு அடைகிறான் இதை உணராத மனிதன் தனக்குள் இறைவனை வைத்து விட்டு வெளியில் தேடியலைகிறான் எனவே இவ்வாறான பேருண்மைகளை தகுந்த ஞான குருவினை அண்டி அவர் ஞான உபதேச வழி நின்று உயர் பேரின்பமாம் இறையின்பத்தினை தொட்டு அனுபவித்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் இரண்டறக்கலப்போம். இவ்வாறு தினந்தோறும் தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு தன்னையும் தனது அவதாரத்தின் மகிமையினையும் யாரிடமும் காண்பிக்காது ஞான உபதேசத்தினை அருளி ஞான வழி காட்டி தன்னைப்போல அனைவரும் ஞானத்தினை பெற வேண்டும் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதற்காக இரவு பகல் பாராது உலக சேமத்துக்காக தன் குருநாதர் ஞானவள்ளல் பகவான் ஸ்ரீ காயத்திரி சித்தர் ஆர்.கே முருகேசு சுவாமிகளின் அடிச்சுவட்டினை பின்பற்றி அவர் இட்ட கட்டளையினை சிரமேற் தாங்கி இந்த தெய்வீக ஞானப்பணியினை செவ்வனே ஆற்றிவருகிறார் ஆன்மீகக் குரு மகா யோகி புண்ணியரெத்தினம் சுவாமிகள். எனவே மக்களாகிய நாமும் உண்மை நிலையினை உணர்ந்து ஞானிகளின் உபதேச நெறி நின்று பொய்யெது மெய்யெது என பிரித்தறிந்து ஒளி பொருந்தியவர்களாய் வாழ்வோமாக.

## கலைஞர் கௌரவிப்பு - 2018 போட்டிக்கான அழைப்பு

2015 – 2017 வரையிலான காலப்பகுதியில் வெளியான நூல்கள் இப் போட்டிக்காய் வரவேற்கப்படுகின்றன. நீங்கள் எழுதிய நூல் பிரதி இரண்டினையும், உங்கள் புகைப்படத்துடன் கூடிய சுய விபரத்தையும் எமக்கு அனுப்புங்கள். 2018 ஏப்ரல் 11ம் திகதிக்கு முன்பதாக நூல்கள் கிடைக்கப் பெற வேண்டும், போட்டியில் பத்து வெற்றியாளர்கள் தேர்ந்தடுக்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளார்கள் என மனமகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

குறிப்பு:– கட்டணமாக இலங்கைப் பணம் 300 ரூபாய் அனுப்புதலும் அவசியமாகும். போட்டி வெற்றியீட்டியவர்களுக்கு தபால் மூலம் மற்றும் முகநூல் வழியாகவும் அறிவிக்கப்படும். இவ் கலைஞர் கௌரவிப்பு விழா இலங்கையில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். அத்துடன் நடுவர்களின் தீர்ப்பு இறுதியானதாக அமையும்.

நூல் பிரதி அனுப்பும் முகவரி
**ஜே. எம். அஜ்மல்கான்,**
பாடசாலை குறுக்கு வீதி,
பசறிச்சேனை, பொத்துவில் –19,
அம்பாறை மாவட்டம், கிழக்கு மாகாணம், இலங்கை.
அழைப்பு எண் : 0094754342208.

உலகப் பாவலர் மன்றம்

நிர்வாகக் குழு,
உலகப்பாவலர்மன்றம்.

# மீன்நாட்டின் கலை - இலக்கிய - பண்பாடு

## கிழக்கு போற்றும் கலைஞன்
## மூத்த படைப்பாளி, சகலகலா வல்லவர்
# அமரர் இரா. பத்மநாதன்



இரா.பத்மநாதன் அவர்கள் மட்டக்களப்பு மண்ணின் மகா கலைஞன் அமரத்துவமாகி பலவருடங்கள் சென்றாலும் இவர் பற்றியும், இவர் தன் மண்ணுக்காக,அதன் கலை, கலாச்சார, விழுமியங்களுக்காக நமது மண்ணின் தனிச் சிறப்பை உலகிற்கு எடுத்து சொல்வதற்காக தன்னை அர்ப்பணித்தவர் என்பதை எமது இளையோர் அறிந்துகொள்ள வேண்டும்.இளையோர் மட்டுமல்ல எம் பிரதேசமக்களில் அனேகம் பேருக்கு இவர் பற்றி தெரியாது என்பதே உண்மை. அறிவியல்யுகத்தில் எல்லாமே கணினி மயமாக்கப்பட்ட தற்கால சூழலில் எங்கே எமது மூத்த முன்னோடிகளை இவர்கள் தெரிந்து கொள்ளாமல் போய் விடுவார்களோ என்ற கவலை என்னுள் எழுகின்றது. இரா.பத்மநாதன் அவர்கள் மட்டக்களப்பில் பிறந்து மட்டக்களப்பில் கல்வி கற்று ஆங்கில ஆசிரியராக களுதாவளையில் பணிபுரிந்தவர். பின்னாளில் அவர் ஒரு எழுத்தாளராக, ஊடகவியலாளராக தன்னை வளர்த்துக்கொண்டு நாட்டில் மிக பெயர் பெற்ற கலைஞராக புகழ் பெற்றார். இவர் தனது 13வது வயதில் தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்த ”அனுமன்”என்ற சிறுவர் சஞ்சிகையில் கதைகள் எழுதியவர். தனது இளமைக்காலத்தில் தனது மண்ணின் பெருமைகளை நாடகங்கள் நடத்தியும், மாஸ்டர் சிவலிங்கம் அவர்களுடன் இணைந்து வில்லுப்பாட்டுகள் நடத்தியும் வெளிப்படுத்தியவர்.முன்னாள் அமைச்சர் திரு. செ.இராஜதுரை அவர்களுடன் இணைந்து இவர் நடித்த ”சங்கிலியன்” நாடகம் 100 தடவைகள் மேடையேறி பாராட்டுகளை பெற்றது. இவர் நகைச்சுவை உணர்வு மிக்கவர். பல மண்சார்ந்த நகைச்சுவை நாடகங்களை மேடை ஏற்றியவர். ”சூடு சாம்பலாப் போச்சி போடியார்” என்ற நாடகம் மிக பிரசித்தம். மட்டக்களப்பு மண்ணின் பேச்சுவழக்கை கையாண்ட ஒரு படைப்பாளி. இதை நான் இவருடன் இலங்கை வானொலியில் கடமையாற்றிய போது உணர்ந்தவன். அவரின் பல வானொலி நாடகங்களில் நடித்து பங்களிப்பு செய்தவன். இலங்கை வானொலியிலே ”வானொலி மாமா” வாக பரிணமித்தவர்.தமிழ்நாட்டிலிருந்த மூத்த கலைஞர்கள், அரசியல் தலைவர்கள், எம்.ஜி.ஆர்.சிவாஜி, ஜெமினி, என்.எஸ்.கிருஷ்ணன், கண்ணதாசன் போன்றோருடன் மிக நெருக்கமான உறவை கொண்டிருந்தவர்.அங்கு திரைப்படத்துறையிலும், ஒளிப்பதிவாளராகவும், உதவி இயக்குனராகவும். சிவாஜி நடித்த பாசமலர் படத்தில் ஒரு சிறு பாத்திரம் ஏற்றும் நடித்தவர். இதெல்லாம் பலருக்கு தெரியாத விடயங்கள் இலங்கை வானொலியில் நிகழ்ச்சி தயாரிப்பாளராக இருந்தபோது இவரின் வைகறைப் பொழுது நிகழ்ச்சி நமது மண்வாசத்தை கொண்டுவந்தது...

## கலைஞர் கௌரவம்

**தொகுப்பு கோவிலூர் செல்வராஜன்**


இவரின் ”கோதண்டம் ஏந்திய கோமகன்” இராம சரிதம் 640 பக்கங்களை உள்ளடக்கியது. மகாபாரதம் 100 தொடர்களாகவும், திருவிவிலியத்தை (பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும்) இலகு தமிழில் 110 தொடர் கட்டுரைகளாக எழுதியவர்...ரூபவாகினியில் ”தேரோடும் வீதியிலே”விபரண சித்திரத்தை காட்சிப் படுத்தியவர்.. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கிழக்கு மாகாணத்திலிருந்து சென்ற முதல் பணியாளர் திரு. இரா. பத்மநாதன் அவர்களே. இவருடன் சேர்த்து, நான், எழில்வேந்தன், ஜெயந்திமாலா, மோகனதாஸ்,(ஜெயகுமார், மகேந்திரன், லோகநாதன்) கடைசி மூன்று பேரும் எழுது வினைஞர்கள். எட்டு பேர்தான் அன்று அங்கு இருந்தோம் அது ஒரு அற்புதமான காலம் அது. எங்களின் காலம்தான் இலங்கை வானொலியின் பொற்காலம். அப்போது இந்த FM வானொலிகள் கிடையாது. திரு. இரா. பத்மநாதன் அவர்கள் சிறந்த நேர்முக வர்ணனையாளர். அவர் மட்டக்களப்பு பிரதேச ஆலய உற்சவங்களை நேர்முகமாக நின்று வர்ணனை செய்து வானலைக்கு அனுப்பியவர். அவர் ஓய்வு பெற்று மீண்டும் தமிழகம் சென்றபோது அவருக்காக நடந்த பிரிவுபசாரத்தில் அவருக்காக ஒரு கவிதை வாசித்தேன். தமிழ் நாட்டிலும் அவர் ஈழத்து ஏதிலியர் புனர்வாழ்வுக் கழகத்தில் சேவை செய்தார். இந்த புனர்வாழ்வுக் கழகத்தை திரு.செல்வநாயகம் சந்திரகாசன் அவர்கள் நடத்திவந்தார். எம் மண்ணின் பெருந்தகை இரா.பத்மநாதன் அவர்கள் பற்றி மட்டக்களப்பு பிரதேச மக்களும் நன்கு அறிவார்கள். அவர் வாழ்க்கை வரலாறு மிக நீண்டது. எமது இளைய தலை முறையினருக்கு சுருக்கமாக எங்கள் முன்னோடி இரா.பத்மநாதன் பற்றி எழுதியுள்ளேன்.

---

இளம் எழுத்தாளர் அ. குகாந்தன் எழுதும்.

# மதுராவின் காதல் கதை...

தொடர் 02



(மருத்துவரிடம் அனுமதிபெற்று மேகனைக்காண ஓட்டமும் நடையுமாக மதுரா செல்கிறாள்)

ஆம்... மேகனைப்பார்க்கும் ஆர்வத்தின் தூண்டுதலால் ஏதோ ஒருவிதமான உந்துதலோடும் மதுரா மேகனது அறைக்குள் நுழைந்தாள் மெதுவாக மேகனோ அடிபட்ட வேதனையில் உண்டாகிய களைப்பினால் அவனுக்கு மருத்துவரால் ஏற்றப்பட்ட மயக்க ஊசியின் மயக்கத்திலும் உறக்கமாக காணப்பட்டான் மெதுவாக அடிமேல் அடிவைத்து மதுரா அவனது கட்டிலுக்கு பக்கத்தில் சென்று அவனது முகத்தை ஒருகணம் உற்று நோக்கினாள் இப்போதுதான் அவனை அணுவணுவாக தனது மனத்திரையிலே படம்பிடிக்கிறாள் இந்தப் படப்பிடிப்பிலே ஆழ்ந்து போயிருந்தவளை மேகனது முனகல் சத்தம் மீண்டும் தன்னிலைக்கு அழைத்து வந்தது. ஆனால் மேகனுக்கு உணர்வு வரவில்லை மாலை மங்கிப் போய்க்கொண்டிருந்தது மதுராவை அறியாமல் அவளது கண்கள் கலங்கின கண்ணீரை சொரிந்தன சொரிந்த நீரின் சிலதுளிகள் அவனது நெற்றியில் பட்டுத்தெறித்தது. ஏனோ காரணம் தெரியாத ஓர் அழுகையிது காரணம் கேட்கவும் முடியாத கதாசிரியனானேன் நானும் பூர்வ ஜென்ம பந்தத்தின் வெளிப்பாடுதான் இதுவோ! ஆம் அப்படியாகக்கூட இருக்கலாம். ஆனால் ஒரு துளிகூட அவளால் அவனை நீங்கி போக மனம் இடங்கொடுக்கவில்லை. இது காதலா ? இல்லை ஜென்மத்தின் தொடர்பா ? விடை தேடுவோம். நேரமுள் சுற்றியதன் தாக்கம் இருண்டவானம் இரவை பொழிய தயாரானது அப்போது மதுராவின் மனமோ ஓர் மதுரகீதமிசைத்தது “கடவுளைக்கண்ட இன்பம் நீ தருகிறாய் கனவிலும் நான் நினைக்காத கருணை முகம்உனதடியிலே காலமெலாம் சேவை செய்வேன் கண்ணாளா நீ கண்திறந்து ஓர் காதல் மொழி பேசிவிடு என் கட்டிளமை பருவத்தையெல்லாம் கொட்டி விடுவேன் உன்னிடம் கட்டியெனை அணைத்து நீயும் முத்தம் கொடடா விட்டு விட்டேன் என் மனதை உன் உயிரில் பல வித்தகங்கள் புரியுதடா என் மனதில்” இவ்வாறு அவனைப்பார்த்துக்கொண்டு இருந்தவளுக்கு மனதிலேஇந்த வசனங்கள் காதல் கீதமாக ஒலித்தது மெதுவாக அவனது நெற்றிமுடியை விலக்கி அங்குமிங்கும் திரும்பி பார்த்துவிட்டு “நச்சென்று” ஒரு முத்தம் கொடுத்துவிட்டு நிமிரவும் அவளது தொலைபேசி அலறவும் சரியாக இருந்தது. காதிலே தொலை பேசியைப் பொருத்தி “ஹலோ அம்மா நான் இப்போ கொஸ்பிற்றல்ல இருக்கன் வெளிக்கிடப் போறன். வந்து விபரமா சொல்லுறன்” என்றவள் தனது தாயாரின் மறுமொழி கேட்காமலே தொலைபேசி தொடர்பை துண்டித்து விட்டு எப்போ இவனை மீண்டும் காண்போம் என்ற ஏக்கத்தோடு மனதை திடப்படுத்திக் கொண்டு வைத்தியசாலையை விட்டு வெளியேறுகிறாள்.....

தொடரும்....



கதை ஒன்று கற்போம் உளநலம் அறிவோம்.

# உண்மைக் கதை

திரு. செ. பிரான்சிஸ் மட்டு சர்வதேச உளவியல்சார் கற்கைகள் நிலையம்.

**மனித சமுதாயம் உளநலம் பற்றிய விழிப்புணர்வடையும் வகையில் தமிழ் ஓசை பத்திரிகை மூலம் வெளிவரும் உளநலக் கதை.**

நான் யார் என்று உனக்குத் தெரியுமா? உலகத்திலே மிகப்பெரிய பணக்காரி நான்தான். நீ எப்படி வைத்தியசாலைக்கு வரச்சொல்வாய் எனக்கு ஒரு வருத்தமும் இல்லையே! தன்னாமுனையை வசிப்பிடமாக கொண்ட குடும்பம் இது. சுரேஸ்(42) மனைவி கவிதா (36) பிள்ளைகள் இரண்டு (15,12 வயது). சுரேஸ் சாதாரண கூலித்தொழில் செய்தே தனது குடும்பத்தை கவனித்து வந்தான். கவிதா மிகவும் சுறுசுறுப்பானவள் எல்லோருடனும் நன்றாக பழகும் குணமுடையவள். குடும்பப் பெண் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டானவள்.

கவிதா ஓரிரு வார காலமாக வழமைக்கு மாறான நடத்தையினை கொண்டிருப்பதனை சுரேஸ் அவதானித்தான். குறைந்த அளவிலே நித்திரை செய்வதுடன் அங்கும் இங்குமாக தொடர்ச்சியாக நடந்து கொண்டும் முன்னொருபோதும் இல்லாதவாறு தனது குடும்பத்தை பராமரிப்பதில் அக்கறை இன்றியும் நடக்க ஆரம்பித்தாள். வழக்கத்துக்கு மாறாக பிறருடன் பேச ஆரம்பித்ததோடு தன்னிடம் நிறைய அற்புதங்கள் சிறப்பம்சங்கள் காணப்படுவதாகவும் அடிக்கடி கூறி பிறரின் நோயை தன்னால் குணப்படுத்தக் கூடிய வல்லமை உண்டு என்றும் ஒரு செல்வந்த குடும்பத்தை சேர்ந்தவள் என்றும் தான் ஒரு அதிசயப்பிறப்பு என்றும் கூறிக்கொண்டே இருந்தாள். அத்தோடு உடைகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் வாங்குவதில் தன் சக்திக்கு மீறி செலவு செய்து கொண்டும் இருந்தாள். கவிதாவிற்கு என்ன நடந்திருக்கும் என்பதை அறியாத சுரேஸ் கவலைக்குள்ளானான் யாரும் சூனியம் செய்திருக்க கூடுமோ? தன் குடும்பத்தை பிரிப்பதற்கு பேயை ஏவி விட்டிருப்பார்களோ? என சுரேஸிற்கு பல எண்ணங்கள் வந்துபோயின இருப்பினும் சுரேஸ் மனம் தளர்ந்து போகவில்லை. எதற்கும் கவிதாவை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று மருந்து எடுப்பது நல்லது என நினைத்து கவிதாவை அழைத்தபோது கவிதாவிற்கு சுரேஸ் மேல் கோபம் கோபமாக வந்தது. தன் கணவனைப் பார்த்துக் கேட்டாள் கவிதா: நான் யார் என்று உனக்குத் தெரியுமா? உலகத்திலே மிகப் பெரிய பணக்காரி நான்தான். நீ எப்படி வைத்தியசாலைக்கு வரச் சொல்வாய் எனக்கு ஒரு வருத்தமும் இல்லையே! எனக் கூறி எதிர்பாராத விதமாக சுரேசின் நெஞ்சுச்சட்டையை பிடித்து கன்னத்தில் அறைந்தாள். இவ்வேளையில் சுரேசின் வீட்டிற்கு சுரேஸின் நண்பன் காந்தன் வந்தான். காந்தனின் இருகரங்களையும் பற்றிப்பிடித்த சுரேஸ் கவிதாவின் நிலைமையை குறித்து சொல்லி அழுது புலம்பினான். காந்தன் ஏற்கனவே உளநலம் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றிருந்தமையினால் கவிதாவிற்கு உளநல பிரச்சினை உள்ளது என்பதை அறிந்துகொண்டு சுரேசுக்கு நம்பிக்கையூட்டினான். பின்னர் இவ் விடயம் தொடர்பாக உளசமுக தன்னார்வச்செயலில் ஈடுபாடு கொண்ட அலோசியஸ்சிடம் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது. அவ்விடத்திற்கு விரைந்து சென்ற அலோசியஸ் நிலைமையை அவதானித்த பின் கவிதாவை மனநல வைத்தியர் ஒருவரிடம் சென்று சிகிச்சையினை மேற்கொள்ளுமாறு ஆலோசனை கூறினார். கவிதா வைத்தியசாலை செல்ல மறுத்ததனால் அயலவரின் உதவியுடன் காந்தனும் அலோசியசும் கவிதாவை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். கவிதா வீட்டில் எவ்வாறு தனது கணவனுடன் நடந்து கொண்டாளோ அவ்வாறே வைத்தியசாலையிலும் நடக்க ஆரம்பித்தாள். ஓர் இரு வாரமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கவிதாவினை உடல் உள ரீதியாக பரீட்சித்த மனநல வைத்திய நிபுணர் கவிதா பித்து (mania) மனநோய்க்கு உள்ளாகியுள்ளதை அறிந்து கொண்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது கவிதா சிகிச்சை முடிவுற்று வீடு திரும்பியுள்ளதுடன் வழமை போன்று எவ்வித பிரச்சினையுமின்றி செயற்பட்டு வருகின்றாள். மீண்டும் வீட்டிற்கு சென்ற காந்தன் கவிதாவிற்கு ஏற்பட்ட நோய் நிலை பற்றி தெளிவுபடுத்தினான். இது மனோபாவத்தில் ஏற்படுகின்ற பித்து மனச்சோர்வு (Manic Depressive or Bipoar Disorder) இருவகை விளிம்பு மனோ நிலைகளுடன் தொடர்புபட்டது. அவை உயர்நிலை (high mood) என அழைக்கப்படும். பித்து மன நிலையும் தாழ் மன நிலையும் (low mood) என அழைக்கப்படுகின்ற மனச் சோர்வு நிலையாகும். எதிர்வரும் காலங்களில் கவிதாவை சரியாக கவனிக்கப்பட வேண்டிய தேவைப்பாடும் ஏற்பட லாம் எனக்கூறி வைத்திய ஆலோசனைப்படி வழங்கப்பட்ட மருந்து மாத்திரைகளை சரியாக உட்கொள்ளுமாறு தேவை ஏற்படின் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு கூறி காந்தன் விடைபெற்றுச் சென்றான். சுரேசிற்கு மனதில் சொல்லொன்னா மகிழ்ச்சி நிலவியதுடன் முன்னர் எவ்வாறு குடும்பத்தில் சந்தோசமாக வாழ்ந்தார்களோ அதே போன்றே இன்று வாழ்ந்து வருகின்றனர்.

முற்றும்.

# உள்ளூராட்சி சபைத் தேர்தலும் தமிழ் மக்களும்...

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

...இதுவரை கூறியவற்றால் எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத்தேர்தலில் வடகிழக்குத் தமிழர்கள் பின்வரும் விடயங்களைச் சாத்தியப்படுத்தவேண்டும்.

1. வினைத்திறன் மிக்க மாற்று அரசியல் தலைமையொன்றை அல்லது மாற்று வழியினை அடையாளம் காணுவதற்குரிய அடித்தளம் இத்தேர்தலில் இடப்படல் வேண்டும்.
2. தமிழர் அரசியலில் பன்முகத்தன்மையை உருவாக்குவதற்கு இத்தேர்தலைப் பயன்படுத்தவேண்டும்.
3. கட்சியரசியலுக்கு அப்பால் உள்ளூராட்சிச் சபைகளில் ஊழல்அற்ற வினைத்திறன்மிக்க அரசியல் நிர்வாகம் அமையும் வகையில் தமிழர்களுடைய வாக்குப்பதிவு நடைபெறவேண்டும்.
4. கிழக்குமாகாணத்தைப் பொறுத்தவரையில் இத் தேர்தலில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது. அது என்னவெனில் அடுத்தவருடம் நடுப்பகுதியில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் கிழக்குமாகாணசபைத் தேர்தலில் அதன் ஆட்சி அதிகாரத்தைத் தமிழர்கள் தம் வசம் தக்கவைத்துக் கொள்வதற்கான "கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக தமிழர் வருவதற்கான" அடித்தளம் இத்தேர்தலில் இடப்படவேண்டும். எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்களிப்பு முறை வித்தியாசமானதாக இருத்தல் வேண்டும். அதில் பன்முகத் தன்மைபொருந்தமாட்டாது என்பதையும் மனங்கொள்ளல் அவசியம். கிழக்கு மாகாணசபைத் தேர்தலைப் பொறுத்தவரை கிழக்கைத்தளமாகக் கொண்டு மேலெழும்பும் ஒரு தனியான அதாவது ஒற்றைக் "கூட்டு அரசியல் அணிக்கே"கிழக்குத் தமிழர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டி வரலாம். அதற்கான அரசியல் ஆயத்தங்கள் இப்போதிருந்தே தேவை. உண்மையில் கிழக்கு மாகாணத் தமிழர்களைப் பொறுத்தவரை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஒரு வியூகமும் ரூபவ் மாகாண சபைத் தேர்தலில் இன்னொரு வியூகமும். பாராளுமன்றத் தேர்தலில் வேறொரு வியூகமும் வகுக்கப்பட வேண்டும். மேலும் தமிழ் மக்கள் நூறுவீதம் வாக்களிக்கும் வகையில் அவர்கள் அரசியல் ஊக்கம் பெற வேண்டும். அவர்கள் அரசியல் ரீதியாக உற்சாகப்படுத்தப்படவும் வேண்டும். இது விடயத்தில் கிழக்கு மாகாணத் தமிழர்களின் அரசியல் விதியைக் கிழக்கு மாகாணத் தமிழர்களே தீர்மானிப்பதற்குக் குறுக்காக அல்லது தடையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கக் கூடாது அதற்கு அனுமதிக்கவும் முடியாது. வடகிழக்குவாழ் ஒட்டுமொத்தத் தமிழர்களும் மேற்சொன்ன நான்கு விடயங்களிலும் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டும் இது விடயத்தில் படித்தவர்கள் பாமரர்களுக்கு வழிகாட்டவேண்டும். அப்படியில்லாமல் பழக்க தோசத்தில் அல்லது வழமைபோல் ஒருகுறிப்பிட்ட சின்னத்திற்குக் கண்ணை மூடிக்கொண்டு வாக்களிப்பார்களாயின் தமிழர் அரசியலில் எந்தமாற்றமும் நிகழாமல் எந்த முன்னேற்றமும் ஏற்படாமல் "பழையகுருடி கதவைத்திறடி" கதையாகத்தான் தொடரும். மட்டுமல்லாமல் தமிழர் அரசியல் மக்கள் நலன்சார்ந்து அமையாமல் தேர்தலை மையப்படுத்திய பதவி அரசியலாகவே தொடர்ந்தும் இருக்கும். தலைவர்களும் "ஓடுகிறவனைக் கண்டால் துரத்துபவனுக்கு இலேசு" எனும் பழமொழிக்கிணங்க மக்கள் ஒருகுறிப்பிட்ட சின்னத்துக்கு நேரே கண்ணை மூடிக்கொண்டு "புள்ளடி" போடுவார்கள் என்ற எடுகோளில் தொடர்ந்து தமிழ்மக்களின் தலையில் குட்டிக்கொண்டே இருப்பார்கள். தமிழ் மக்களும் தலைவர்கள் குட்டக்குட்ட குனிந்துகொண்டே இருப்பார்கள். தமிழர் அரசியல் " குட்டக்குட்டக் குனிபவனும் மடையன் குனியக்குனியக் குட்டுபவனும் மடையன்" எனும் கதையாகத் தொடரும். இதனை மாற்றியமைக்க வேண்டுமாயின் மேற்கூறப்பட்ட நான்குவிடயங்களையும் மனதில் கொண்டு எதிர்வரும் உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் வடக்கு கிழக்குத் தமிழர்கள் வாக்களிக்க வேண்டும். வாக்களிப்பு முறைபின்வருமாறு அமையலாம்.

1. உள்ளூராட்சிச் சபையொன்றின் வட்டாரமொன்றில் போட்டியிடும் எல்லாத் தமிழ்க்கட்சிகளையும் மற்றும் ஊர்மக்களால் நிறுத்தப்பெற்ற சுயேச்சைக் குழுக்களையும் சேர்ந்த எல்லாவேட்பாளர்களையும் மதிப்பீடு செய்து "எடைபோட்டு" அவர்களுக்குள்ளே ஆளுமை - ஆற்றல் - அர்ப்பணிப்பு - அனுபவம் மிக்க ஊழல்அற்ற வினைத்திறன்மிக்க சிறந்த செயற்பாட்டாளர் ஒருவரைத் தேர்வு செய்து அந்தச் சிறந்த வேட்பாளர் எந்தத் தமிழ்க்கட்சியில் அல்லது சுயேச்சைக்குழுவில் போட்டியிடுகிறாரோ அந்தத் தமிழ்க்கட்சியின் சின்னத்துக்கு அல்லது சுயேட்சைக்குழுவின் சின்னத்துக்கு அந்தக் குறிப்பிட்ட வட்டாரத்தில் வாக்களிக்க வேண்டும். சிறந்த வேட்பாளரைக் கொண்ட தமிழ்க்கட்சி அல்லது சுயேச்சைக்குழு குறிப்பிட்ட உள்ளூராட்சிச் சபையொன்றில் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடலாம். இதில் வட்டாரமொன்றில் அதி சிறந்த வேட்பாளர் ஒருவர் வெற்றிபெறுதலே முக்கிய மானது. எனவே கட்சியை மட்டும் பார்க்காமல் வேட்பாளரின் தகுதியையும் பார்த்து வாக்களிக்க வேண்டும்.

இப்படி வாக்களிப்பதன் மூலம் உள்ளூர்மட்டத்தில் உருவாகும் சிறந்த தலைவர்கள் தேசியமட்டத்திற்கு எதிர்காலத்தில் வரும்போது வினைத்திறன்மிக்க மாற்று அரசியல் சக்தியொன்று தானாகவே மேற்கிளம்பும். அத்துடன் தமிழர் அரசியலில் பன்முகத்தன்மை ஏற்பட்டு தமிழர் அரசியல் ஆரோக்கியம் பெறும். இதன் உடனடிப் பலன் என்னவெனில் ஊழல் அற்ற வினைத்திறன்மிக்க மக்களுக்கு உச்சசேவையை வழங்கக்கூடிய அரசியல் நிர்வாகம் ஒன்று உள்ளூராட்சிச்சபையில் அமையும். இதுவே கட்சி அரசியலுக்கு அப்பாலான தமிழ்மக்களின் எதிர்பார்ப்புமாகும்.

முற்றும்.

# தொடர் நாடகங்களும் தொலைந்து போகும் கல்வியும்...



இன்றைய போட்டி நிறைந்த கல்வியுலகில் நாடுகளுக் கிடையே தனது கல்வித் தரத்தினை நிலை நிறுத்து வதற்கு அறிவியல், விஞ்ஞானம், விவசாயம், கைத்தொழில் என பல்வேறு துறைகளூடாக தனது முயற்சிகளை மேற்கொள்கின்ற வகையில் எமது நாட்டில் கடந்த முப்பது ஆண்டுகள் நடைபெற்ற உள்நாட்டு அசாதாரண சூழல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஏழுவருடங்கள் கடந்துள்ள போதும் கிராமப்புறங்களில் கல்விக்கான வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் இன்னும் கேள்விக் குறியாகவே உள்ளது.

- அபிவிருத்திகள் முற்றுப்பெறாத பாடசாலைகள்
- வளங்களின் பற்றாக்குறை (பௌதீக மனித நிதி)
- பூர்த்திசெய்யப்படாத உட்கட்டமைப்பு வசதிகள்
- நிரந்தர குடியிருப்பின்மை
- போக்குவரத்து வசதியின்மை
- வாழ்வாதாரம் கேள்விக்குறியான நிலை

போன்ற பல்வேறு காரணிகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்ற வேளையில் இன்னும் சிக்கலான நிலையைத் தோற்றுவிப்பதற்காக பின்வரும் காரணிகள் செல்வாக்கினைக் கூறலாம்.

- அதிகரித்துவரும் தொலைபேசிப்பாவனை (கையடக்கத்தொலைபேசி (smart phone)
- சிறுவர் திருமணங்கள் (கற்கும் காலத்தில்)
- தொலைக்காட்சி தொடர்நாடகங்கள்

மேற்கூறிய காரணிகளில் கையடக்கத்தொலை பேசிப் பாவனை பாவிப்பவரை மட்டும் அதிகளவில் பாதிக்கின்றது. இளவயதுத் திருமணம் அவற்றையும் சட்டத்தின் மூலமும் சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் படிப்படியாக குறைத்துச்செல்லமுடியும்.ஆனால் இன்று கிராமப்புறவீடுகளை ஆக்கிரமித்துள்ள தொலைக்காட்சிகளும் தொலைக்காட்சி நாடகங்களும் மாணவர்களின் கல்வியையும் கற்றல் ஆர்வத்தையும் பாதிப்புக்குள்ளாக்கும் தொற்று நோயாக மாறியுள்ளது. எமது பாடசாலை கிராமப்புற பாடசாலை 450 மாணவர்கள் கற்கின்றனர் 6 கிராமங்களை உள்ளடக்கிய ஒரேஒரு உயர்தரப்பாடசாலை இவ்ஆறு கிராமங்களில் 5 கிராமங்கள் சேனைக்கிராமங்கள் வீதிகள் ஏனையவசதிகள் இன்னும் சீர்செய்யப்படாத நிலையிலும் மின் இணைப்பு வழங்கப்பட்டது இங்கு 95ஏற்கும் அதிகமானோர் மின் இணைப்பைப் பெற்றுள்ளதுடன் தொலைக்காட்சிப் பெட்டியும் வைத்துள்ளனர். எமது மாணவர்களின் கற்றல் சூழல் வீடுகளின் கற்கும் இடம் கற்றல் நடைபெறுகின்றதா என்பதனை இரவு நேர மேற்பார்வை செய்வோம்.அதில் அவதானிக்கப்பட்ட சம்பவங்களை இங்கு குறிப்பிடலாம் என நினைக்கின்றேன்.

**சம்பவம்-01**

நேரம் 7.35 இரவு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நான்கு ஆசிரியர்கள் நானுட்பட மோட்டார் மோட்டர் சைக்கிளை சற்றுத் தொலைவில் நிறுத்திவிட்டு இவ்வருடம் க.பொ.த. (சா/த)ப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவி ஒருவரின் வீடு. திடீரென உள்நுழைந்தோம்.மிகவும் பிரபலமான தொலைக்காட்சி தொடர்நாடகம் ஒன்று ஒளிபரப்பாகிக்கொண்டு இருந்தது. பூர்த்தியாக்கப்படாத வீடு ஆனால் முன்மண்டபம் தரையோடு பதிக்கப்பட்டுள்ளது மின் விசிறி பொருத்தப்பட்டுள்ளது. 21" தொலைக்காட்சி பெட்டி மேசையில் இரண்டு பக்கமும் பூங்கொத்துக்கள் மின்விசிறி சுழல்கிறது. குடும்பத்துடன் இருந்து நாடகத்தை இரசித்துக்கொண்டிருந்தனர்.

**சம்பவம்-02**

இரவு நேர மேற்பார்வைக்காக வீடொன்றுக்கு சென்றவேளை முன்மண்டபத்தில் தொலைக்காட்சியில் வீட்டிலுள்ள அனைவரும் தொடர்நாடகம் பார்த்துக் கொண்டிருந்தனர். பிள்ளை(09) படித்துக்கொண்டிருப்பதாக படித்துக்கொண்டு கதவு இடைவெளியினூடாக நாடகம் பார்த்துக்கொண்டிருந்தது.

**சம்பவம்-03**

மேற்பார்வைக்காக சென்ற வேளை அவதா னித்தோம். உயர்தரம் மாணவனொருவனின் வீடு.வீட்டில் தொலைக்காட்சிப்பெட்டி மேசைச் சீலை விரிக்கப்பட்டு பூங்கொத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட மேசையில் அழகாக காட்சி தந்தது. அனைவரும் நாடகம் பார்த்து கொண்டிருந்தனர். மாணவன் படிக்கும் அறையின் மூலை யில் கடதாசி விரிக்கப்பட்டு அதற்குமேல் பாடப்புத்தகங்கள் பயிற்சிக் கொப்பிகள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. பாய்விரித்து தரையில் இருந்து மாணவன் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். நாம் செய்த முதல் வேலை தொலைக் காட்சிப்பெட்டியை தூக்கி பாயில் வைத்து விட்டு அந்த மேசையை மாணவன் படிப்பதற்கு வழங்கிவிட்டு வந்தோம். இவ்வாறான சம்பவங்களை அவ்வப்போது சந்திக்கின்றோம். எமது கிராமப்புறப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் பாடசாலைக்கல்வி தவிர அவ்வாசி ரியர்களினால் ஒழுங்கு செய்யப்படும் மேலதிக வகுப்புகள் தவிர ஏனைய எந்தவிதமான கற்றல் வாய்ப்புகளும் கிடைப்பதில்லை எனவே வீடுகளில் கற்றலுக்கான வாய்ப் புகளையும் அதற்கு தேவையான பொருத்தமான சூழலையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது ஒவ் வொரு பெற்றோரினதும் கடமையாகும் இவ்விடயத்தை ஒவ்வொரு பெற்றார் சந்திப்புக்களின் போதும் வலியுறுத் தப்பட்டபோதும் மாற்றம் மிகமிக மெதுவாகவே நடை பெறுகின்றது.

மாணிக்கம் இளங்கோ

போட்டி நிறைந்த உலகில் மனிதன் நவீனத்தை கல்வியூடாக அடைவதற்கு ஓடிக்கொண்டிருக்கின்ற வேளை கிராமப்புரங்களில் இன்னும் பழமையை விடாப்பிடியாக பிடித்துக்கொண்டு தமது பிள்ளைகளின் கல்வியை பாழாக்குகின்றனர். உயிரற்ற சடப்பொருளுக்கும் அதை வைப்பதற்கு செலவு செய்யும் பணத்தையும் தொடர்நாடகங்களுக்காக செலவு செய்யும் நேரத்தையும் தனது பிள்ளையுன் கல்வியின்பால் முதலீடு செய்யும் பெற்றோர்கள்குயைவாகவே இருக்கின்றனர். இத்தொடர் நாடகங்களின் தாக்கம் ஒரு போதைவஸ்தை ஒத்ததாக காணப்படுகின்றது. இன்று முடியும் பகுதி நாளைய எதிர்பார்ப்பை தூண்டுவதாகவே அமைவதனால் வீடுகளில் எவ்வாறான அவசியமான பணிகள் இருந்தாலும் நாடகங்களுக்கு முன்னுரிமை வழங்குவதைக் காணக் கூடியதாக இருந்தது. இந்நாடகங்களின் தாக்கம் பிள்ளையினைத் தொற்றிக் கொண்ட பாடசாலைகளுக் குள்ளும் பரவுகின்றது. பாட இடவேளைகளில் கற்றல் விடையங்களைத் தவிர்த்து நாடகங்கள் பற்றியே அதிகள வில் உரையாடுகின்றனர். நகர்புற பாடசாலைகளைப் பொறுத்தவரையில் பாடசாலை செல்லும் பிள்ளை காலை 6.00 மணிக்கு விட்டை விட்டு வெளியேறினால் தொடர்ச்சியாக கடுகதியாக அலைகின்றது.பாடசாலைக்கும் வகுப்புக்கும் இரவு 8.00 மணிக்கு வீடு வரும் பிள்ளை களும் உள்ளனர். பெற்றோர் அலுவலக பணி அல்லது அதற்கு தயார்படுத்துதல் என நேரம் சூழலுவதால் தொலைக்காட்சிப்பெட்டி அங்கு வெறும் காட்சிப் பொருளாகவே காணப்படுகின்றது. ஆனால் கிராமப் புறங்களில் அவ்வாறில்லை கணவன் வயல் தோட்டவேலை மனைவி வீட்டில் பகலில் இயங்கத் தொடங்கிய தொலைக்காட்சிப் பெட்டியும் அதில் ஒளிபரப்பாகும் தொடர்நாடகங்களும் இரவு 10-10.30 வரை நீண்டு கொண்டு செல்லும் இடைவேளை செய்திகளும் ஏனைய நிகழ்ச் சிகளும் அப்போதுதான் சற்று ஓய்வும் அவசர அவசரமான சமையலும். இவ்வாறான தொடர்நாடகங்கள் மூலம் ஏதாவது பயனுள்ள விடயங்கள் பகிரப்படுகின்றதா என்றால் அதற்கு இடமில்லை அனேகமான தொடர் நாடகங்கள்

- இரண்டு திருமணம்
- மற்றவரின் சொத்தை அபகரிப்பது
- குடும்பங்களுக்கிடையிலான பிணக்கு
- கொலை கொள்ளை
- வன்முறை

இவ்வாறான சமூகவிரோத செயல்களைத் தூ ண்டுகின்றனவாகவே அமைந்துள்ளது. இது மாணவர் களின் கற்றலையும் கற்றல் அடைவையும் பாதிப்பதாகவே அமைகின்றது. அண்மையில் கிழக்கில் ஒரு கொலைச் சம்பவம் கொலையாளிகள் பாடசாலை மாணவர்கள் அவர்கள் அளித்த வாக்குமூலத்தில் அவர்கள் அக் கொலையை திட்டமிடுவதற்கு பல்வேறு தொலைக் காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்களின் இறுவட் டுக்களை பார்வையிட்டதாகவும் தெரிவித்தனர். என்பதனை பத்திரிகை மற்றும் இணையத்தளம் வாயிலாக அனை வரும் அறிந்திருப்பீர்கள். எனவே வேகமாக வளர்ச் சியடைந்து வரும் கல்விப்புல மாற்றங்களை உள்வாங்கி நடைமுறைப்படுத்துவதற்கு தடையாகவுள்ள இத்தொலைக் காட்சி தொடர்நாடகங்களால் கிராமப்புற மாணவர்களின் கற்றல் அடைவும் அதன் தாக்க விளைவும் நீண்டு செல்வதனைத் தடுப்பததற்கு அனைவரும் முன்வர வேண்டும். அந்தவகையில் கிராமப்புர ஆசிரியர்கள் பல்வேறு செயற்திட்டங்களை வகுத்து வெற்றிகொண்டு வருகின்றோம் படிமுறையான மாற்றங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் எமது பணிமூலம் கிராமப்புற மாணவர்களின் கல்வி உயர்வான மாற்றங்களை சந்திக்கும்.


# பக்க வாதமும் இயன் மருத்துவமும்



**க.ஹரன்ராஜ்**
இயன் மருத்துவப் பிரிவு, பேராதனை பல்கலைக்கழகம்



இன்று உலகில் அதிகளவில் ஏற்பட்டுவரும் பிரதான தொற்றா நோய்களில் பக்கவாதமும் ஒன்றாகும். இன்று 6 பேரில் ஒருவர் பக்கவாத நோயால் பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பக்கவாதம் வருமுன் காக்கப்பட வேண்டிய ஒரு பிரதான நோயாகும். இருந்த போதிலும் பக்கவாதம் பற்றிய விழிப்புணர்வு பொது மக்களிடம் மிகக் குறைவாகக் காணப்படல் ஒரு வருந்தக் கூடிய விடயமாகும். இது மிகவும் அச்சுறுத்தக் கூடியதும், உயிரிழப்பைத் தோற்றுவிக்கக் கூடியதுமான ஒரு தொற்றா நோயாகும். நவீன மருத்துவத்துறை எவ்வளவு சிறப்பாக முன்னேற்றமடைந்திருந்தாலும் நாளுக்கு நாள் பக்கவாதத்தால் பாதிக்கப்படும் நோயாளர்களின். எண்ணிக்கையும் அதிகரித்தே செல்கின்றது.




கடவுளுடைய அதிசயமான படைப்பிலே உருவான மனிதப் பிறவியில் மிகவும் பிரமிக்கக் கூடிய பல பிரமாண்டமான ஆற்றல்களை உள்ளடக்கியுள்ளதும், மிகவும் சிக்கலானதும், அதிக குருதி, நரம்பு விநியோகம் கொண்ட உறுப்பு மனித மூளையாகும். மனிதனில் அனைத்து விதமான செயல்பாடுகளையும் கட்டுப்படுகின்ற உயர் கட்டமைப்பு, தொழிற்பாட்டு மையமும் அது வேயாகும். மனிதனின் ஒவ்வொரு தொழிற்பாடுகளும் மூளையின் குறித்த ஒரு பகுதியால் கட்டுப்படுத்தப்படும். மூளையானது. உயர் ஒட்சிசன் தேவையுள்ள குருதிக் குழாய்களின் சிக்கலான வலைப்பின்னலால் உருவான அமைப்பர்கும். அதே வேளை ஒட்சிசன் விநியோகம் தடைப்படும் போது முதலாவதாக இறக்கின்ற உறுப்பும் அதுவேயாகும்.

### பக்க வாதம் அல்லது பாரிசவாதம் என்றால் என்ன????

மூளையின் குறித்த சில பாகங்கள் சடுதியாக செயலிழப்பதால் உடலின் சில பாகங்களை அசைக்க முடியாத நிலை உண்டாகின்றது. பொதுவாக மூளையின் வலது பகுதி உடலின் இடது பாகங்களையும் மூளையின் இடது பகுதி உடலின் வலது பாகங்களையும் கட்டுப்படுத்துகின்றது. மூளையின் குறித்த பகுதி செயலிழப்பதால் அப் பகுதியால் கட்டுப்படுத்தபடுகின்ற உடலின் குறித்த பாகம் செயலிழந்துவிடுகின்றது. மூளைக்கு குருதியை கொண்டு செல்கின்ற நாடிகளில் ஏற்படும் திடீர் அடைப்புக்களால் மூளைக்கான சீரான குருதி சுற்றோட்டம் பாதிக்கப்படும். தொடரும் இன் நிலையானது மூளையின் விரைவான செயலிழப்புக்கு வழிகோலும். இதனால் மூளையின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட குறித்த பாகத்துக்கான நரம்பிணைப்பு துண்டிக்கப்படுவதால் அப் பாகம் செயலிழக்கின்றது. இந்நிலை பக்கவாதம் எனப்படும்.

### இதன் விளைவாக உடலில் பின்வரும் மாற்றங்கள் நிகழும்

- சுய நினைவற்ற நிலை
- புலனுணர்வுகள், உடலின் இயக்கம் என்பன பாதிக்கப்படும்.
- உடலின் ஒருபக்கம் செயலிழக்கும்
- உடல் தசைகளுடைய அசைவு பாதிக்கப்படும்
- உடல் பலவீனமடையும்.
- சுவாசிப்பதில் சிக்கல் நிலை தோன்றும்
- மூட்டுகள் விறைப்புத்தன்மையாக மாறும்
- முகம் மற்றும் வாய் சமச்சீரற்று காணப்படல் அல்லது வாய் சற்று கோணலாக மாறல்
- வழமையான பேச்சில் தெளிவின்மை
- உணவை விழுங்குவதில் சிக்கல்
- நினைவாற்றல் குறையும்
- சடுதியான மயக்கம் கடும் தலைவலி ஏற்படும்

இன்று உலகில் 100 000 மக்கள் வருடமொன்றிக்கு பக்கவாதத்தால் அவதியுறுகின்றனர். இதில் 40000 பேர் உயிர் பிழைத்து வாழ்கின்றார்கள்.

### கீழ்வரும் காரணிகள் பக்கவாதத்துக்கான வாய்ப்பை அதிகரிக்கின்றது.

- **வயது** - வயது அதிகரிக்கும் போது ஆண் பெண் இருபாலாருக்கும் பக்கவாதம் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்
- **இலிங்கம்** - 19% ஆன ஆண்கள் பெண்களை விட அதிகமாக பாதிக்கப்படுகின்றனர்
- மது அருந்துதல் புகைப்பிடித்தல் போன்ற பழக்க வழக்கங்கள் பக்கவாதம் ஏற்படுவதை பன்மடங்கு அதிகரிக்கும்.
- நீரழிவு நோய் உயர் குருதி அமுக்கம் மன அழுத்தம் போன்ற நிலைமைகளும் பக்கவாதத்திற்கான வாய்ப்பை அதிகரிக்கும்
- போதிய அளவு உடற்பயிற்சியின்மையால் குருதி சுற்றோட்டம் பாதிக்கப்பட்டு காலப் போக்கில் பக்க வாதத்துக்கான வாய்ப்பை அதிகரிக்கும்.
- முறையற்ற உணவு பழக்கங்கள் அதாவது நிரம்பிய கொழுப்பமிலங்கள் நிறைந்த உணவுகள் குருதி கலன்களில் கொலஸ்ரோல் படிவுகளை ஏற்படுத்துவதால் இது பக்க வாதத்திற்கு வழிகோலும்
- பரம்பரை பரம்பரையாக கடத்தப்படும் நிறமூர்த்தங்களாலும் இவை ஏற்ப்படுத்தப்படும்.
- அதிகளவில் கருத்தடை மாத்திரைகள் பாவித்தல் கொகையின் (Cocaine) பாவித்தல் அதிக உடற் பருமன் போன்ற பல காரணிகளும் பக்கவாதம் ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்துகின்றது.

### பக்கவாதம் இருவகைப்படும் அவையாவன

- இஸ்கேமிக் (Ischaemic)
- கீமோறேஜிக் (Haemorrhagic)

### இஸ்கேமிக் (Ischaemic)

மூளைக்குச்செல்லும் இரத்தக்குழாய்களில் கொழுப்பு பைபிரின் நார்கள் கல்சியம் ஆகியன படிவதாலும் இரத்தக்கட்டிகள் உறைவதாலும் குருதிக்குழாயின் பருமன் குறைவடைந்து மூளைக்கான குளுக்கோசு ஒட்சிசன் விநியோகம் தடைப்படுகிறது. இதனால் மூளையின் கலங்கள் காலப்போக்கில் இழக்கப்படுகின்றது.

### கீமோறேஜிக் (Haemorrhagic)

மூளையில் காணப்படுகின்ற சில குருதிக்குழாய்களின் சுவர் மென்மையடைந்து உயர் குருதி அமுக்கத்தின் காரணமாக ஏற்படுத்தப்படும் இரத்தக் கசிவினால் இந்நிலை உருவாகின்றது. இதற்கு தலையோட்டிலுள்ள அமுக்கமும் காரணமாகும்.

### சில தடுப்பு முறைகள்

- ஒழுங்குமுறையான உடற்பயிற்சி
- ஆரோக்கியமான உணவுமுறைகளை கையாளுதல்
- புகைத்தல், மது அருந்துதல் போன்றவற்றை தவிர்த்தல்.
- நீரழிவு நோய் இதய நோய்களிலிருந்து விடுபடுதல்

### பக்கவாதத்தில் இயன் மருத்துவர்களின் பங்களிப்பு

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களிற்கு புனர் வாழ்வளித்து வழமையான நிலைக்கு கொண்டு வருவதில் இயன் மருத்துவம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. பக்க வாதத்தினால் யாராவது பாதிக்கப்பட்டால் அருகிலுள்ள வைத்தியசாலையை உடனடியாக நாட வேண்டும். அதன் பின்னர் வைத்தியசாலையில் அந்நோயாளி உயிர் ஆபத்தை தாண்டிய பின்னர் இயன் மருத்துவ சிகிச்சைக்காக நரம்பியல் வைத்திய நிபுணரால் சிபார்சு செய்யப்பட்டு இயன் மருத்துவ சிகிச்சை தொடங்கப்படும். இயன் மருத்துவர்களினால் தொடர்ச்சியான சரியான ஆலோசனைகளும் உடற்பயிற்சிகளும் வழங்கப்படும். பல்வேறு வகையான கையாளுதல் நுட்பங்கள் பயன் படுத்தப்பட்டு நோயாளிகளுக்கு உரிய வேளையில் பொருத்தமான புனர்வாழ்வளித்து வழமை நிலைக்கு திரும்பும் இயன் மருத்துவ நுணுக்கங்கள் கையாளப்படும். இதன் மூலம் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் விரைவில் தங்கள் இயல்பு நிலைக்கு திரும்ப தொடர்ச்சியாக பயிற்சி வழங்கப்பட்டு குணமடைய இயன் மருத்துவர்கள் துணை புரிவார்கள்.

பக்கவாதம் என்பது வரும்முன் தடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். சரியான உடற் பயிற்சியும் ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கமும் பக்கவாதம் வராமல் தடுக்க சிறந்த எளிய வழிகளாகும். ஆகையால் இதன் தோற்றத்துக்கு காரணமாகும் காரணிகளிலிருந்து முற்காப்பு எடுத்துக்கொள்வதுடன் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு திறமையான இயன் மருத்துவரின் உதவியை நாடி தொடர்ச்சியான சிகிச்சைகளை பெறுவதன் மூலம் ஒரு முன்னேற்றகரமான நிலையை அடைய முடியும். எனவே பக்கவாதம் எனும் கொடிய நோயிலிருந்து எம்மையும் எம் அயலவர்களையும் பாதுகாத்து ஒரு ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து பக்கவாதத்தை வராமல் விரட்டியடிப்போமாக..

இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக
**தமிழ் ஓசை பத்திரிகை நடாத்தும் கவிதைப் போட்டி**

கவிதைகள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி
**20-04-2018**


**தலைப்புக்கள்**
01) உன் கல்லறை வாசகங்கள்.....
02) ஊமை நாடகங்கள்.....
03) நிலவு உருகியது....

**மின்னஞ்சல் மூலமாக அனுப்புவதாயின்**
thamilosai7@gmail.com

**தபால் மூலமாக அனுப்புவதாயின்**
ஆசிரியர்,
தமிழ்ஓசை,
இல. 184, பஸார் வீதி, மட்டக்களப்பு.

**நிபந்தனைகள்...**
- ☐ போட்டியாளர்கள் மூன்று தலைப்புக்களில். ஏதாவது ஒரு தலைப்பினை தேர்வு செய்து எழுத்துப்பிழைகள் இன்றி ஆங்கில வடமொழி கலப்பின்றி தமிழில் புதுக் கவிதை புனையலாம்.
- ☐ சொல்லாடல், கவிநயம், மொழிநடைகள் சிறப்பாக அமைதல் வேண்டும்.
- ☐ 70 – 80 சொற்களுக்குள் கவிதை அமையவேண்டும்.
- ☐ கவிதைத்தேர்வுகள் தேர்ச்சிபெற்ற கவிஞர்களை வைத்தே தேர்வு செய்யப்படும்.
- ☐ கவிதைகள் யாவும் ஏப்ரல் 20ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
- ☐ தெரிவு செய்யப்படும் கவிதையிற்கு பணப்பரிசில்கள் வழங்கப்படும் முறையே முதலாமிடம் 2000/=, இரண்டாமிடம் 1500/=, மூன்றாமிடம் 1000/=
- ☐ கவிதைகளை அனுப்பும்போது பிறிதொரு தாளில் பெயர், முகவரி, தொடர்பு இலக்கம் என்பன குறிப்பிடல் வேண்டும்.
- ☐ தமிழ்ஓசை பத்திரிகை குழுமத்துடன் சார்ந்தோர் உறவினர்கள் பங்குபற்ற முடியாது.

# தமிழ் ஓசை குறுக்கெழுத்துப் போட்டி - 01




**இடமிருந்து வலம்**

1. உணவு என்றும் சொல்லலாம்.
4. கீரியை இப்படியும் கூறுவர். (குழம்பியுள்ளது)
6. சூதாடு கருவி.
7. வீட்டினுள் வளர்க்கப்படும் பிராணி. (திரும்பியுள்ளது).
8. பறவை வகைகளுள் ஒன்று.
9. சிங்கம் வாழும் இடம்.
11. நஞ்சு என்றும் சொல்லலாம்.
12. இது நடைபெறும் காலங்களில் மிகச்சிறப்பாக இருக்கும்.

**மேலிருந்து கீழ்**

1. மீன் பிடிக்க உதவுவது.
2. கண்ணகியின் கையில் இருப்பது.
3. வெற்றிலை பாக்கு
5. தேனீ பூக்களில் இருந்து சேகரிப்பதை இப்படியும் கூறுவர்.
10. சிறைப்பட்ட குற்றவாளி.
11. ஆன்மா.

மேலே உள்ள கூப்பனை நிரப்பி வெட்டி தபாலில் அனுப்பிவைக்க வேண்டும் பிரதி செய்து அனுப்புவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியான விடையினை எழுதியவர்கள் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படுவர் தெரிவுசெய்யப்படும் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே 300/= 200/= 150/= பணப்பரிசில்கள் வழங்கப்படும்

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி - 25.04.2018**
**அனுப்பவேண்டிய முகவரி**
**தமிழ் ஓசை இல. 184, பஸார் வீதி, மட்டக்களப்பு.**

# தமிழ் ஓசை நுண்ணறிவு வினாவிடைப் போட்டி



**போட்டி இல. : 04**

## வினாக்கள்

01. ஓர் அறைக்கு வர்ணம் பூசுவதற்கு 4 லீற்றர் 500 மில்லிலீற்றர் தீந்தை தேவை. ஒரு லீற்றர் தீந்தையின் விலை ரூபாய் 2500.00 எனின் அறைக்கு வர்ணம் பூச செலவாகும் பணம் எவ்வளவு?
02. கடிகாரம் ஒன்று காட்டும் நேரம் பி.ப 3.5 ஆகும். ஆனால் அது 40 நிமிடங்கள் நேரத்தை பிந்திக் காட்டுகிறது எனில் உண்மையான நேரம் யாது?
03. ஒரு பேரூந்து ஒன்றில் 53 பேர் பயணம் செய்யலாம் எனின் 309 பேர் பயணிக்கத் தேவையான பேரூந்துகளின் எண்ணிக்கை யாது?
04. ரிஜி, சுஜி, விஜி ஆகியோரின் மொத்த நிறை 105kg 600g ஆகும். மூவரும் சம நிறையுடையவர்கள் எனில்இரிஜிஇவிஜி ஆகியோரின் மொத்த நிறையைக் காண்க?
05. நேர் விளிம்புகள்இஉச்சிகள்இதட்டையான முகங்கள் இல்லாத திண்ம உரு எது?
06. ஏப்ரல் மாதம் 1ம் திகதி புதன்கிழமை என்றால் அம்மாதத்தில் புதன்கிழமைகள் எத்தனை வரும்?
07. 22.15 இக்கடிகாரத்தில் காட்டும் நேரத்தை சாதாரண நேரமாக மாற்றுக.
08. ரகுவின் வயதின் 4 மடங்குடன் 4ஐக் கூட்டினால் அது அவனின் அப்பாவின் வயது ஆகும்.தங்கை ஐதுவின் வயதைப் போல 11 மடங்கு அப்பாவின் வயதுக்குச் சமனாகும்.அப்பாவின் வயது 44 எனின் ரகுவிற்கும் ரகுவின் தங்கைக்குமிடையே எத்தனை வயது வித்தியாசம்?
09. ஷீலாவை விட பாமா உயரமானவள்.ஆனால் கவியை விட உயரம் குறைந்தவள். அதேவேளை ஷீலாவும் நீலாவும் சம வயதுடையவர்கள். ரூபா கவியை விட உயரம் குறைந்தவள் ஆனால் பாமாவை விட உயர்ந்தவள் எனின் இவர்களில் மிக உயரமானவர் யார்?
10. 44, 39, 33, 26, ...... ,...... அடுத்து வர வேண்டிய இரு எண்களை எழுதுக?.
11. மூன்று பட்டங்கள் கட்டுவதற்கு 24 ஈர்க்குகள் தேவை எனின் ஒரு பட்டம் கட்டத் தேவையான ஈர்க்குகளின் எண்ணிக்கையை உரோம எண்ணில் எழுதுக?.
12. அடுத்த லீப் வருடம் எது?
13. 2.5 லீற்றர் பாலுடன் 500ml பாலைச் சேர்த்தால் பாலின் அளவினை மில்லி லீற்றரில் கூறுக?.

**நிபந்தனைகள்.**

❖ தரம் – 03 04 05 வகுப்பு மாணவர்கள் மாத்திரம் பங்குபற்ற வேண்டும்.
❖ வினாக்களுக்குரிய சரியான விடையினை கீழ்குறித்த படிவத்தில் எழுதி விண்ணப்பத்தை பூர்த்தி செய்து வெட்டி தபாலில் அனுப்பிவைக்க வேண்டும் படிவத்தினை பிரதி செய்து அனுப்புவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
❖ குறித்த பத்து வினாக்களுக்குரிய சரியான விடையினை எழுதியவர்கள் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படுவர் தெரிவுசெய்யப்படும் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூபா 500, 300, 250 பணப்பரிசில்கள் வழங்கப்படும் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர்கள் அடுத்து வரும் பத்திரிகையில் வெளியிடப்படுவதுடன் அதிஸ்டசாலிகளாக 5பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களது பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

குறிப்பு : நுண்ணறிவு 03 இற்கான விடைகளும் வெற்றிபெற்றவர்கள் விபரமும் 07 இல் வெளியாகும்.

**விடைகளை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி**
**20-04-2018**

**அனுப்ப வேண்டிய முகவரி**
**ஆசிரியர்**
**தமிழ் ஓசை**
**இல. 184, பஸார் வீதி, மட்டக்களப்பு**

**விடைகளை எழுதி அனுப்பவேண்டிய படிவம்**

01. ____________________ 02. ____________________
03. ____________________ 04. ____________________
05. ____________________ 06. ____________________
07. ____________________ 08. ____________________
09. ____________________ 10. ____________________
11. ____________________ 12. ____________________
13. ____________________

முழுப்பெயர் : ____________________
முகவரி : ____________________
தொலைபேசி இல. : ____________________ தரம் : ____________________
பாடசாலை : ____________________





## மட்டக்களப்பு - கல்லடி
## கலார்ப்பணா நாட்டிய நிலையத்தின்
## சதங்கை நாதாம்ருதம்









மட்டக்களப்பு கல்லடி கலார்ப்பணா நாட்டிய நிலையத்தின் பத்தாவது (10) ஆண்டு நிறைவு விழா அண்மையில் கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத் தின் இராஜதுரை அரங்கில் நாட்டிய நிலையத்தின் ஸ்தாபகர் திருமதி சசிகலாராணி ஜெயராம் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. தமிழர்களின் பாரம்பரிய கலைகள் மெல்ல அழிந்து சென்று கொண்டிருக்கும் இக்காலப் பகுதியில். அதனை அழியவிடாமல் பேணிப் பாதுகாத்து, எதிர்கால சந்ததியினருக்கு எடுத்தியம்ப வேண்டிய தூர நோக்க பணியில் தன்னை அர்ப்பணித்து நடனத்திலும், சங்கீதத்திலும் சிறந்த ஆசிரியராக இருந்து. பலமாணவர்களை கலைத்துறையில் உருவாக்கிய பெருமைக் குரிய கலாவித்தகர், நடனக் கலைமாமணி அவர்களது வழிகாட்டலில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு சதங்கை நாதாம்ருதம் எனும் நாட்டிய நிகழ்வினை நடத்தியமை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓர் வரலா ற்று சிறப்பு வாய்ந்த கலை நிகழ்வு என்பது சிறப்பம்சமாகும் .






இப் பத்திரிக்கையானது தமிழ் ஓசை நிறுவனத்தினரால் மட்டக்களப்பு வணசிங்கா அச்சகத்தில் 2018 மார்ச் மாதம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.